வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 01 20.06.2021 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 199 பக்கங்கள் : 16




# சீனாவின் துறைமுக நகரத் திட்டத்தை உன்னிப்பாக அவதானிக்கும் புதுடில்லி

## இந்திய நலனுக்கு அச்சுறுத்தலாக அமையலாம் என்கின்றார் இந்திய கடற்படை துணைத் தளபதி



புதுடில்லி, ஜூன் 20

இலங்கையில் சீனா புதிய துறைமுக நகரம் ஒன்றை அமைத்திருப்பது இந்தியாவின் நலன்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடும் எனத் தெரிவித்திருக்கும் இந்திய கடற்படையின் உயர் அதிகாரி ஒருவர், இந்த நடவடிக்கைகளை இந்தியா உன்னிப்பாக அவதானிக்க வேண்டியிருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

15



## ‘எக்ஸ் – பிரஸ் பேர்ள்’ விபத்து தாக்கம்: ஆராய இலங்கை வந்தது ஐ.நா. குழு

கொழும்பு, ஜூன் 20

“எக்ஸ் - பிரஸ் பேர்ள்” கப்பல் விபத்தின் சுற்றாடல் தாக்கங்களை ஆராய்வதற்கான ஐ.நா. சுற்றாடல் திட்ட குழு உறுப்பினர்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

15

## 2ஆவது தடுப்பூசி கிடைக்குமா என்ற சந்தேகத்தில் மக்கள்

### குற்றஞ்சாட்டுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூன் 20

முதலாவது டோஸ் கொரோனாவைரஸ் தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்கள் இரண்டாவது டோஸ் தங்களிற்கு கிடைக்குமா என்ற சந்தேகத்தில் உள்ளனர் என ஜே.வி.பியின்

15

## பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஐவர் பருத்தித்துறையில் தொற்று உறுதி

யாழ்ப்பாணம், ஜூன் 20

பருத்தித்துறை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் ஐவர் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர் ஒருவர் என 6 பேருக்கு

15

## 2,169 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜூன் 20

நாட்டில் நேற்றும் 2 ஆயிரத்து 169 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி கொரோ

15

## அமைச்சர் விமலின் அதிகாரம் குறைப்பு

கொழும்பு, ஜூன் 20

அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு கீழிருந்த லங்கா பொஸ்பேட் நிறுவன லிமிட்டட் ஆனது

15



## தனியார் காணியில் வெடிபொருட்கள்!

முல்லைத்தீவு, ஜூன் 20

முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் 5ஆம் வட்டாரத்தில் தனியார் காணி ஒன்றில்

15

## 2,500 ஐத் தாண்டியது கொரோனா மரணம்

கொழும்பு, ஜூன் 20

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 500 ஐக் கடந்துள்ளது.

நேற்றுமுன்தினம் 54 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம்

15

## கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் நாளை தளர்கின்றது பயணத்தடை

கொழும்பு, ஜூன் 20

நாடளாவிய ரீதியில் அமுல் படுத்தப்பட்டுள்ள முழுநேரப் பயணத் தடையை சுகாதார நிபுணர்களின் கடும் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் நாளை அரசு தளர்த்துகின்றது.

பயணத் தடை அமுலில் உள்ள காலத்தில் நாட்டில் நாளாந்த கொரோனா மரணங்களும், தொற்றாளர்களின் எண்ணிக்கையையும் குறையவில்லை. இவ்வாறான நிலையில் நாட்டை

15

## யாழ்.மாவட்டத்தில் 34 பேர் உட்பட வடக்கில் 53 பேருக்கு தொற்று!

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்.மாவட்டத்தில் 34 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 53 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று 621 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களின் விபரம் வருமாறு:

யாழ்.மாவட்டத்தில்

15




## சிலரின் குறுகிய நோக்கத்துக்காக மக்களின் எதிர்காலத்தைப் பலி கொடுக்கவே முடியாது!

### இலுப்பைக் கடவையில் டக்ளஸ் திட்டவட்டம்

மன்னார், ஜூன் 20

இலுப்பைக் கடவை கடற்றொழிலாளர்கள் மத்தியில் காணப்படும் தொழில்சார் முரண்பாடுகளுக்கு சுமுகமான தீர்வு பெற்றுத்தரப்படும் என்று உறுதியளித்துள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

சில தரப்புக்களின் குறுகிய நோக்கத்துக்காக மக்களின் வளமான எதிர்காலத்தைப் பலி கொடுக்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

15



உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது...!

ஓர் அரசன் தன் நாட்டை ஆட்சி செய்து வந்தான். திடீரென்று ஒரு நாள் அவனுடைய நாட்டை, பக்கத்து நாட்டு அரசன் படையெடுத்து வந்து முற்றுகையிட்டான். உடனே அரசன் எல்லோரையும் அழைத்து, பகைவர்களின் படை விரைந்து வந்துகொண்டிருக்கிறது! அவர்களை எப்படி எதிர்கொள்வது? இப்போது நாம் என்ன செய்யலாம்? என்று ஆலோசனை கேட்டான். அங்கிருந்த பொறியியல் வல்லுநர்கள், நம் தலைநகரைச் சுற்றிலும் பெரிய ஒரு மண் சுவர் எழுப்பி, அதைச் சுற்றி ஓர் அகழி அமைக்க வேண்டும் என்றார்கள்.

அந்திருந்த மரவேலை செய்வோர், மண் சுவர் பயனற்றது, மழை வந்தால் கரைந்துவிடும். எனவே மரத்தினால் சுவர் அமைக்க வேண்டும் என்று கூறினார்கள். அப்போது கொல்லர்கள், நீங்கள் சொல்வது எதுவுமே சரியில்லை. இரும்புச்சுவரைப் போன்று ஒரு பாதுகாப்பை வேறு எதனாலும் தர முடியாது. இரும்பினால்தான் மதிற்சுவரைக் கட்ட வேண்டும் என்று கூக்குரலிட்டனர். அப்போது அங்கே வந்த சட்ட நிபுணர்கள், நாம் பகையரசனிடம் நீங்கள் இப்படி வலுவில் வந்து எங்கள் நாட்டின் மீது படையெடுப்பது முறையல்ல. இது சட்டத்திற்குப் புறம்பானது. எதையும் சட்டப்பூர்வமாக அணுகுவதுதான் சிறப்பு. எனவே நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பின்படி நீங்கள் நடப்பதுதான் நியாயமாகும் என்று, அவர்களுக்கு அறிவுரை சொல்ல வேண்டும் என்று வாதிட்டார்கள்.

இப்படியெல்லாம் அவர்கள் நாட்டைக் காப்பாற்றுவதற்குப் பதில் வீண் வாக்குவாதம் செய்வதிலும், தங்களுக்குள் சண்டையிடுவதிலும் காலத்தை வீணாக்கிக் கொண்டிருந்தார்கள். இதற்குள் பகை அரசன் புயல்போல் தன் படைகளுடன் தலைநகரத்திற்குள் புகுந்தான். அவன் எந்த எதிர்ப்பும் இன்றி, மிகவும் சுலபமாகத் தலைநகரத் தைக் கைப்பற்றினான்.

ஒரு தடவை சுவாமி விவேகானந்தர் கூறிய இந்தக் கதைதான் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

இந்தியாவோ திரும்பத்திரும்ப, பதின்முன்றாவது அரசியலமைப்புச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதன்மூலம் தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் என்று கூறிக்கொண்டே இருக்கின்றது.

நாமும் அவர்களிடம் போய் எங்களுக்கு உதவுங்கள் என்று கேட்டுக்கொண்டே இருக்கின்றோம். ஆனால் இந்தியா சொல்கின்ற பதின்மூன்றைப்பற்றி பேசுவதற்கு நாம் தயாராக இல்லை.

பதின்மூன்றில் ஒன்றும் இல்லை என்றும் சொல்லுவோம், இருக்கின்றதையும் அரசாங்கம் புடுங்குகின்றது என்றும் கத்துவோம்.

அண்மையில் இந்தியத் தூதுவரைச் சந்தித்த கூட்டமைப்பின் தலைவர்கள், கீரிமலையில் உள்ள மாளிகையை சீன நிறுவனத்திற்கு கொடுக்கவிருப்பது பற்றியும் சீனா காங்கேன்துறையில் இருப்பது இந்தியாவின் குறிப்பாக தமிழ்நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்தானது என்று ‘ஆலோசனை’ சொன்னதாக ஒரு செய்தி வெளிவந்திருந்தது.

சீன நிறுவனம் காங்கேசன்துறையில் இருந்தால் எப்படி அது

தமிழகத்தின்பாதுகாப்பிற்கு பாதகமானது என்பது குறித்து எப்போது ஆய்வு செய்தார்கள் என்று தெரிய வில்லை. கிளி சோதிடம் சொல்கின்ற காலம் எல்லாம் எப்போதோ போய்விட்டது தலைவர்களே. இப்போது எதைச் சொன்னாலும் அது குறித்து விஞ்ஞானபூர்வ ஆய்வுகளுடன் சொல்லவேண்டும் என்ற சாதாரண அறிவுகூட நமக்கு இல்லையா?

அதுதான் போகட்டும், தடுப்பூசி வாங்கக் காசில்லையென்றால் கேளுங்கள் புலம்பெயர் தமிழர்களிடம் வாங்கித் தருகின்றோம் என்று வாய்ச்சவடால் விட்டீர் களே, இப்போது கீரிமலை மாளிகையை குத்தகைக்கு கொடுப்பதற்கு கேள்விப் பத்திரம்தானே கோரவிருக்கின்றார்கள். புலம்பெயர் தமிழர்களை அந்தக் கேள்வியைக் கோரி மாளிகையை நாமே எடுக்கலாமே என்று தூதுவர் திருப்பிக் கேட்காததால் தப்பித்தீர்கள் போங்கள்.

மாகாணசபை அதிகாரம் இல்லாததாகவே இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் அதனை முழுமையாக ஏற்றுக்கொண்டு இந்தியாவின் துணையுடன் நமது காய்களை நகர்த்தினால் மாத்திரமே அதிலிருந்து முன்னோக்கி செல்லமுடியும். இன்றைய பூலோக அரசியல் இந்திய விருப்புக்கு மாறாக ஒரு நூல்அளவுதானும் நகராது என்பதை புரிந்துகொள்ளும்வரை நமக்கு நக்குத்தண்ணிதான்.

விவேகானந்தரின் கதைபோல, நாம் நமக்குள் மோதிக் கொண்டிருக்க,மாகாணசபைகளின் அதிகாரங்கள் எல்லாமே புடுங்கப்பட்டுவிடும். அதன் பின்னர், மாகாணசபை இருக்க வேண்டும் என்பதற்காக மாத்திரம் நாம் போராடிக்கொண்டிருக்கவேண்டியநிலைமைதான் வரும்.

**- ஊர்க்குருவி**

# கம்மன்பிலவுக்கு கை கொடுக்கும் சு.க.

## பிரேரணையை எதிர்க்க முடிவு

கொழும்பு, ஜூன் 20

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு ஆதரவாக குரல் கொடுப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதன்படி மொட்டு கட்சியின் சில உறுப்பினர்களால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைக்கு எதிர்ப்பை வெளியிடவும், கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்ப்பதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பு விரைவில் அதிகாரபூர்வமாக கட்சி செயலாளரால் வெளியிடப்படவுள்ளது.

# வங்கி பாதுகாவலர் உட்பட 6 பேருக்கு கொரோனா

கொழும்பு,

காலி வந்துரம்ப பகுதியில் உள்ள ஒரு வங்கியில் பாதுகாப்பு உத்தியோகத்தர் உட்பட 6 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளமை அடையாளம் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

உடல் நலக்குறைவு காரணமாக குறித்த பாதுகாப்பு உத்தியோகத்தர் மருத்துவமனைக்கு சென்றுள்ளார்.

அங்கு, பாதுகாப்பு உத்தியோகத்தரும் அவரது மனைவியும் விரைவான அன்டிஜென் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதில், பாதுகாப்பு உத்தியோகத்தருக்கும் அவரது மனை விக்கும் கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

இதையடுத்து பத்தேகம சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுயில் மேலும் 4 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட உள்ளனர்.

இதேவேளை, கொரோனாவால் பாதிக்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தரின் வீட்டில் 3 குழந்தைகள் உள்ளனர், அவர்களும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஆசிரியர்கள் மீதான அழுத்தத்தை நிறுத்துக!

## 11 சங்கங்கள் கூட்டறிக்கை

கொழும்பு, ஜூன் 20

நிகழ்நிலை கற்பித்தற்கான ஆசிரியர்கள் மீதான அழுத்தத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என 11 ஆசிரியர் சங்கங்கள் கூட்டாக வலியுறுத்தி யுள்ளன. இது தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

2020 மார்ச் 12 ஆம் திகதி தொடக்கம் கொரோனா நோய் பரவல் காரணமாக பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டன. இந் நிலைமை ஒரு வருடமும் 3 மாதங்களும் கடந்த நிலையில் தொலைக்கல்வி முறைகள் பல காணப்பட்ட போதும் கோவிட்-19 நிலைமைக்குள் பாதிக்கப்பட்ட பாடசாலைக் கல்வியைக் கொண்டு செல்வதற்கு அரசாங்கத்தின் ஒரே தீர்வாக காணப் படுவது நிகழ்நிலை (online) கற்பித்தலே.

எனினும் கல்வி அமைச்சு மற்றும் மாகாண கல்வி அதிகாரிகள் மூலம் நிகழ்நிலை (online) கற்பித்தலுக்கு தேவையான கருவிகள் மற்றும் தரவு(data) போன்ற எவ்வித வசதிகளும் ஆசிரியர்களுக்கு ஏற்பாடு செய்து தரப்படாத நிலையில் தற்போது நடைபெறுகின்ற நிகழ்நிலை கற்பித்த லுக்கு தேவையான செலவுகளை ஆசிரியர்களே சுயமாக மேற்கொள்கின்றார்கள் . எனினும் இம்முறையின் மூலம் 60 வீதத்திற்கு அதிகமான மாணவர்கள் பாதிப்படைகின்றனர்.

இந்நிலைமையில் கல்வி அமைச்சு, மாகாண மற்றும் வலய கல்வி பணிமனைகள் மூலமாக ஆசிரியர்கள் சுயமாக மேற்கொள்ளும் நிகழ்நிலை கல்வி செயற்பாடுகளை மேற்பார்வை செய்து வருகின்றன. ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காமல் அவர்கள் சுயமாக முன்வந்து செய்யும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதை நாம்வன்மையாக கண்டிக்கின்றோம்.

மேலும் சில வலய கல்விப் பணிமனைகள் நிகழ்நிலை கல்வி தொடர்பாக ஆசிரியர்களுக்கு கடுமையான அழுத்தங்களை கொடுத்து வருகின்றன. அனேகமான மாணவர்கள் நிகழ்நிலை கற்றலில் பங்கு பற்றாத போதிலும் அவ்வா றான மாணவர்களை எப்படியாவது பங்குபெறச் செய்யுமாறு வலய கல்விப் பணிமனைகள் அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு கடுமையான அழுத்தத்தை கொடுத்து வருகின்றனர்.

அதிபர்கள் ,ஆசியர்கள் ஆகிய நாம் மேற்படி அச்சுறுத்தலுக்கு அடிபணியாமல் சுயமாக நாம் மேற்கொள்ளும் சேவைகளை கண்காணிப்பு செய்ய இடம் கொடுக்காமல் இருக்குமாறு அனைத்து ஆசிரியர்களையும் கேட்டுக் கொள்கின் றோம்.

மேலும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு எவ்வித வசதிகளையும் வழங்காமல் நிகழ்நிலை கற்றலுக்கு அழுத்தத்தைக் கொடுப்பதும், மேற் பார்வை செய்வதையும் உடன் நிறுத்துமாறு கல்வி அதிகாரிகளை கேட்டுக் கொள்வதோடு, கடமையோடு தொடர்புபடாத சுயமாக கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களை நாம் கேட்டுக் கொள்வது இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு அடிபணிய வேண்டாம் என்பதே ஆகும்.

இந்த அறிக்கையில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க மற்றும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலா ளர் ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் கையொப்பம் இட்டுள்ளதோடு இலங்கையில் உள்ள பல முன் னணி ஆசிரியர் சங்கங்கள் இணைந்து இக்கோரிக்கையை விடுத்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் குறிப்பிட்டார்.

# மாகாண சபைத் தேர்தலும்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு அழுத்தம் கொடுங்கள் என இந்தியத் தூதுவர் கூட்டமைப்பிடம் சொன்னாரா?

மாகாண சபைகளை இல்லாதொழிப்பது இல்லையெனில், அதற்குள்ள அதிகாரங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக பிடுங்கி அதனை ஒரு வெற்றுக்கோதாக மாற்றிவிடு வது என்ற இலக்குடன்தான் அரசாங்கம் சென்றுகொண்டிருக்கின்றது. மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படாமல், ஆளுநர்களின் கீழ் அவை நிர்வகிக்கப்பட்டு இதற்கு வாய்ப்பைக் கொடுக்கின்றது.

இந்த நிலையில்தான், கூட்டமைப்பைச் சந்தித்த இந்தியத் தூதுவர், “மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடத்துமாறு இலங்கை அரவை வலியுறுத்துங்கள்” என ஆலோசனை வழங்கினார்.

இதிலுள்ள முக்கியமான அம்சம் என்னவென்றால், பயணத் தடை காரணமாக தமது ஊர்களில் இருந்த கூட்டமைப்பின் தலைவர்கள் ஜனாதிபதியைச் சந்திப்பதற்காகத்தான் கொழும்பு வந்திருந்தார்கள். புதன்கிழமை இடம்பெறவிருந்த அந்தச் சந்திப்பை இறுதி நேரத்தில் ஜனாதிபதி ரத்துச் செய்தார். அதற்கான காரணம் சொல்லப்படவில்லை. ஆனால், தற்போதைய சூழ்நிலையில் கூட்ட மைப்பை சந்திப்பதை ஜனாதிபதி விரும்ப வில்லை.

அவரைச் சந்திக்க வந்த நிலையில்தான், இந்தியத் தூதுவரை ஒரு திடீர் ஏற்பாடாக கூட்டமைப்பு சந்தித்தது.

கூட்டமைப்பைச் சந்திப்பதற்கே தயாராக இல்லாத ஜனாதிபதியிடம், “மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துங்கள்” என அவர்கள் எவ்வாறு வலியுறுத்த முடியும்? அவ்வாறு வலியுறுத்தினாலும், அதனைக் கேட்பதற்கு அவர் தயாராக இருப்பாரா?

ஈழநாடு
Eelanadu
20.06.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆனி 06

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## ஓர் ஆசனம் பறிபோனது!

2020ஆம் ஆண்டிற்கான புதிய வாக்காளர் கணிப்பின்படி, யாழ் மாவட்டத்திற்கான பாராளுமன்ற ஆசனம் ஒன்றால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, இதுவரை ஏழு ஆசனங்களைக் கொண்டிருந்த யாழ்ப்பாண மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்புரிமை, தற்போது ஆறாக குறைந்துள்ளது. இது, ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். இதன்படி 2025இல் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களே செல்வர். தமிழ் தேசிய நிலைப்பாட்டின்கீழ் போட்டியிடும் கட்சிகள் மேலும் நெருக்கடிகளை எதிர்கொள்ளவுள்ளன. ஒருவேளை, எதிர்காலத்தில் அரசாங்க ஆதரவு கட்சிகள் கூடுதல் ஆசனங்களைப் பெறும் நிலைமை ஏற்பட்டால், தமிழ் தேசியவாத கட்சிகளின் பிரதிநிதித்துவ பலம் மேலும் பலவீனமடையலாம். இதனை தமிழ் தேசிய கட்சிகள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன? அவர்களால் எதிர்கொள்ள முடியுமா?

அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுவதாக பிரச்சாரங்களை மேற்கொள்வதில் பயனில்லை. தற்போதுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும், புதிதாக வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே மாவட்டங்களுக்கான பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகின்றது. வடகிழக்கில், தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கையில் ஏன் வீழ்ச்சி ஏற்பட்டது?

வடக்கு கிழக்கிலிருந்து இதுவரையில் 13 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் புலம்பெயர்ந்துவிட்டனர். தமிழ் மத்தியதர வர்க்கத்தின் ஒரு பகுதி இப்போதும் புலம்பெயர்வது தொடர்பிலேயே சிந்திக்கின்றது. வாய்ப்பு கிடைத்தால் பலரும் வெளிநாடுகளை நோக்கி பயணிக்கவே விரும்புகின்றனர். இந்த நிலையில் வாக்காளர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்துகொண்டே செல்லப்போகின்றது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணிப்பின்படி, எதிர்காலத்தில் வடக்கு கிழக்கிலிருந்து 14 தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மேல் செல்வது கடினம். வடக்கு கிழக்கில் போட்டியிடும் அனைத்து தமிழ் கட்சிகளும் இந்த 14 ஆசனங்களை பங்குபோடுவதற்காகவே போட்டியிடப்போகின்றன. தமிழ் தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் ஓரணியில் நின்றால் மட்டுமே ஆகக்கூடிய ஆசனங்களுடன் பாராளுமன்றம் செல்லமுடியும். ஆனால், தங்களுக்குள் மோதுவது தொடர்பிலேயே எப்போதும் சிந்தித்துக்கொண்டிருக்கும் கட்சிகள் மத்தியில் ஒன்றிணைவு ஏற்படுவதற்கான வாய்ப்பும் இல்லை.

இன்றைய நிலையில் தமிழர்களிடமுள்ள ஒரேயோர் அரசியல் பலம், அவர்களிடமுள்ள பிரதிநிதித்துவ பலம் மட்டும்தான். ஆனால் நிலைமைகளை அவதானித்தால், இந்த விடயத்திலும் எதிர்காலம் மோசமாகவே தெரிகின்றது. பெரும்பான்மையின சிங்களவர்களால் தீர்மானிக்கப்படும் இலங்கையின் பாராளுமன்றத்தில், எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாத ஒரு மக்கள் கூட்டமாகவே தமிழர்கள் குறுகிப் போகலாம். அரசியல் ரீதியில் தமிழர்களைவிடவும், முஸ்லிம்கள் பலமாக இருக்கும் நிலைமை உருவாகலாம். ஏனெனில், அவர்களால் இலங்கை முஸ்லிம்கள் என்னும் அடிப்படையில் ஒரணியாக நிற்கமுடியும். ஆனால், தமிழர்களுக்கு அவ்வாறானதொரு வாய்ப்பும் இல்லை. ஏனெனில், யாழ்ப்பாண அரசியல் கட்சிகளுடன் எந்தவொரு மலைய கட்சியும் ஒன்றிணைந்து செயற்பட வராது. ஏனெனில், அவர்களது அரசியல் புரிதலும் அவர்களது சமூக பொருளாதார தேவைகளும் வேறானது.

எதிர்காலம் தொடர்பான சரியான பார்வை இல்லாவிட்டால், நிலைமைகளில் எந்தவொரு மாற்றத்தையும் எவராலும் ஏற்படுத்த முடியாது. இருக்கின்ற மாகாண சபையை, மிகவும் உச்சளவில் பயன்படுத்திக்கொண்டு, வடக்கு கிழக்கிற்கான அபிவிருத்திப் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தாவிட்டால், தமிழர்களை அவர்கள் நம்பும் எந்தவொரு கடவுளர்களாலும் காப்பாற்ற முடியாது.

# மாகாண சபைத் தேர்தலும் இந்தியாவின் அறிவுரையும்

**அர்ஜுனா**

"மாகாண சபை தேர்தல்களை விரைவாக நடத்துவதற்கு இலங்கை அரசுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு அழுத்தம் கொடுக்க வேண்டும்" என இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பக்லே கூறியிருக்கின்றார். இந்திய உயர் ஸ்தானிகருக் கும் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையே வியாழக்கிழமை நடைபெற்ற சந்திப்பின் போதே இதனை இந்தியத் தூதுவர் தெரிவித்தார்.



"மாகாண சபைத் தேர்தல்கள் தள்ளிப் போகும் பட்சத்தில், சிறிது சிறிதாக மாகாண சபை முறைமை இல்லாமல் போய்விடும்" என்றும் இதன்போது, இந்தியத் தூதுவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இந்தியத் தூதுவர் தெரிவித்த கருத்து நிச்சயமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றுதான். "கொழும்புக்கு அழுத்தம் கொடுங்கள்" என்பது வழமையாக கூட்டமைப்பினால் சர்வதேசத்துக்கும், இந்தியாத் தூதுவர் போன்ற வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் முன்வைக்கப்படும் கோரிக்கைதான். இந்த முறைதான் முதல் தடவையாக "இலங்கை அரசுக்கு கூட்டமைப்பு அழுத்தம் கொடுக்க வேண்டும்" வெளிநாட்டுத் தூதுவர் ஒருவர் கூட்டமைப்புக்கு கூறியிருக்கின்றார்.

> **கூட்டமைப்பைச் சந்திப்பதற்கே தயாராக இல்லாத ஜனாதிபதியிடம், "மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துங்கள்" என அவர்கள் எவ்வாறு வலியுறுத்த முடியும்? அவ்வாறு வலியுறுத்தினாலும், அதனைக் கேட்பதற்கு அவர் தயாராக இருப்பாரா?**

இந்தியத் தூதுவரின் இந்தக் கருத்து - இவ்விடயத்தில் இந்தியா மேற்கொண்டு செய்வதற்கு எதுவும் இல்லை. நீங்களே மாகாண சபைகளைக் காப்பாற்றிக்கொள்ளுங் கள் என்ற கருத்தைப் பிரதிபலிக்கின்றதா?

இலங்கை விடயத்தை இந்தியா எவ்வாறு கையாளப்போகின்றது என்பது தெளிவற்ற ஒன்றதகவே இருக்கின்றது!

இரண்டு தினங்களுக்கு முன்னர் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அரின்டம் பக்ச்சி, "கொழும்பு துறை நகர திட்டம் குறித்து எங்களின் சமீபத்தைய பாதுகாப்பு அடிப்படையில் விடயங்களை உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம்" எனத் தெரிவித்திருந்தார். "இந்தியாவின் கடல்சார் பாதுகாப்பு விடயங்களில் இலங்கை அக்கறை கொள்ள வேண்டும்" என்ற கருத்தையும் அவர் முன்வைத்திருந்தார்.

கொழும்பு துறைமுக நகரத்திட்டம் இந்தியாவின் கடல்சார் பாதுகாப்புக்கு பெரும் சவாலாக அமைந்திருக்கின்ற போதிலும், அதனை எவ்வாறு கையாள்வது என்பதில் இந்தியாவின் அணுகுமுறை தெளிவற்றதாகவே இருக்கின்றது. ஆனால், தமது கரிசனையை வெளிவிவகாரப் பேச்சாளர் மூலமாக இந்தியா வெளிப்படுத்தியிருந்தது.

புதுடில்லியின் இராஜதந்திர உள்ளகத் தகவல்களை வெளிப்படுத்தும் பிரபல தினசரி ஒன்று கடந்த வாரம் வெளியிட்ட செய்தி ஒன்று முக்கியமானது. "இந்து சமுத்திரத்தில் சீனா ஆழமாக கால்பதிப்பதால் இலங்கையுடனான உறவுகள் குறித்து இந்தியா மறுபரி சீலனை வருகிறது" என "தி பிரின்ட்" என்ற தினசரி செய்தி வெளியிட்டிருந்தது.


ராஜபக்ஷக்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வந்த பின்னர் கொழும்புடனான இராஜதந்திர உறவுகளுக்குப் புத்துயிர் கொடுப்பதற்கு புதுடில்லி விரும்பியது. ஆனால், இந்தி யாவை சமநிலையில் வைத்திருப்பதற்குப் பதிலாக ஒரேயடியாக சீனாவின் பக்கம் சாயும் இலங்கையின் நிலைப்பாடு டில்லியைத் தடுமாற வைத்திருக்கின்றது. கடந்த மாதம் இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட கொழும்பு துறைமுகச் சட்டமூலம், இந்தியாவின் பிரதான எதிரியை இந்தியாவின் கொல்லைப் புறத்துக்கே கொண்டுவந்திருக் கும் நிலையில், இனிமேலும் உறங்கிக்கொண் டிருக்க முடியாது என்ற உண்மையை புதுடில்லிக்குத் தெளிவாக உணர்த்தியிருக் கின்றது.

இந்தப் பின்னணியில்தான் இலங்கையை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து டில்லி மீள்பரிசீலனை செய்வதாக 'த பிரின்ட்' செய்தி வெளியிட்டிருந்தது.

இலங்கையைக் கையாள்வதற்கான எந்த விதமான 'பிடி' யும் புதுடில்லியிடம் இல்லை என்பது அவர்களுடைய பலவீனத்துக்கு பிரதான காரணம். அதனால்தான் நீங்களே

(02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூன் - 20 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - ஆனி 6
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 6.00
திதி : ஏகாதசி




## இன்றைய ராசிபலன்

20.06.2021

**மேடம்**
மருத்துவ செலவுகள் குறையும். வியாபாரப் பிரச்னைகள் தீரும். அனுபவசாலி ஒருவரின் அறிமுகம் உதவிகரமாக இருக்கும். உறுதியோடு செயல்படுவீர்கள். சிறிய அளவில் ஆதாயம் கிடைக்கும்.

**இடபம்**
மற்றவர்களின் பணியை ஏற்றுச் செய்து மகிழ்ச்சி தருவீர்கள். பணி பற்றிய முயற்சிகளில் சாதகமான பலன் தாமதமாகும். எந்த வயதினருக்கும், உரிய உழைப்புக்கு பலன் கிடைக்கும்.

**மிதுனம்**
குடும்பத்தினரிடையே அன்பு கூடும். திடீர் நன்மை வரும். மற்றவர்க்கு, உங்கள் மீது மதிப்பு உயரும்படி செயல்படுவீர்கள். பணியிடத்தில் இருந்து வந்த சமீபத்திய நிலை மாறும்.

**கடகம்**
கருணை அதிகரிக்கும். தெய்வீக சிந்தனைகள் கூடும். உணவு விஷயத்தில் கவனமாக இருந்தால் ஆரோக்யம் பிழைக்கும். தாயார், தாய்வழி உறவினர் மூலம் நன்மைகள் உண்டு.

**சிம்மம்**
பிள்ளைகளின் திருமணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். தடைகள் நீங்கி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு கண்ணுக்குத் தெரியும். வீண்செலவுகள் தீரும். இரக்கமும் பக்தியும் அதிகரிக்கும்.

**கன்னி**
சமீபத்தில் மனதை ஆக்கிரமித்திருந்த மகிழ்ச்சிக் குறைவு நீங்கும். பிறரை நம்பி எந்தவித வாக்குறுதியும் கொடுக்க வேண்டாம். வாழ்க்கைத துணைக்கு ஏற்பட்ட பிரச்னைகள் தீரும்.

**துலாம்**
வழக்குகளின் போக்கு மிகவும் மந்தமாகவே இருக்கும். தனிப்பட்ட விவகாரங்களில் முன்பைவிட முன்னேற்றம் இருக்கும். அவ்வப்போது மந்தமான நிலை காணப்பட்டாலும் இனிய நாளே.

**விருச்சிகம்**
வாழ்வில் வளம் சற்றுக்கூடும். சிறு பயணத்தால் நன்மை வரும். அதிகாரிகளிடம் பேசும்போது நிதானத்தைக் கையாள வேண்டும். அபூர்வமாகக் கிடைக்கும் வாய்ப்பு ஒன்று வரவிருக்கிறது.

**தனுசு**
வெளிநாடுகளுக்கு செல்லும் விருப்பம் தாமதமாகும். பெரிய திட்டம் ஒன்று சிறு தடைகளுக்குப்பின் நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் கவலையும் மாறி மாறி நிலவும்.

**மகரம்**
பெயர், புகழை நிலைநிறுத்த கடினமாக உழைப்பீர்கள். கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தப் பாடுபடுவீர்கள். வீட்டிலும் வெளியிலும் சுற்றியிருப்போரின் ஆதரவைப் பெறுவீர்கள்.

**கும்பம்**
ஒப்பந்தங்களில் கையெழுத்திடும்போது கவனம் தேவை. மேற்கொள்ளும் பணிகளில் எதிர்நீச்சல் போட்டுதான் முன்னேற முடியும். வார்த்தைகளை கவனத்துடன் பயன்படுத்துவது நல்லது.

**மீனம்**
மற்றவர்களின் பொறுப்பு எதையும் ஏற்க வேண்டாம். உடல்நிலையில் சிறு பாதிப்பு தோன்றி உடனே சரியாகும். எடுத்த பணியில் முழுமூச்சாக ஈடுபட்டு அதை முடிக்க வேண்டி வரும்.

# அதிக லாப ஆசை காட்டி ஏமாற்றும் சீன செயலிகளுக்கு தடை விதிக்க வேண்டும்

## டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, ஜூன் 20

"மக்களை ஏமாற்றுவதையே பிழைப்பாக கொண்ட நிறுவனங்கள் புதுப்புது வடிவங்களில் மக்களை ஏமாற்றி வருகின்றன. அந்த வகையில் சில சீன நிறுவனங்கள், இந்தியாவில் நிழல் நிறுவனங்களை தொடங்கி, அதன் செயலிகள் மூலம் முதலீடுகளுக்கு அதிக லாபம் தருவதாக ஆசை காட்டி ஏமாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. சீன செயலிகளுக்கு தடை விதிக்க வேண்டும்" என பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியிருக்கின்றார்.



இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"பவர் பேங்க் ஆப், டெஸ்லா பவர் பேங்க் ஆப் என்ற பெயரில் செயல்பட்டு வரும் செயலிகள் வழியாக பணத்தை முதலீடு செய்த சென்னையைச் சேர்ந்த 37 பேர் மொத்த முதலீட்டையும் இழந்து தவிக்கின்றனர். தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலும் இதேபோன்று பலர் ஏமாந்திருக்கின்றனர். வாடிக்கையாளர்களை ஏமாற்றுவதற்கான இந்த நடைமுறை காலம் காலமாக இருப்பதுதான். இதுவரை ஆடம்பரமான அலுவலகம் அமைத்து, பரிசு பொருட்களை கொடுத்து, கவர்ச்சிகரமான வட்டி விகிதத்தை அறிவித்து முதலீட்டாளர்களை ஏமாற்றும் வேலையை உள்ளூர் நிறுவனங்கள் செய்து வந்தன.

சீன நிறுவனங்களோ, இப்போது உயர்தொழில்நுட்பத்துடன் செயலிகள் மூலம் மக்களை ஏமாற்றுகின்றன. சீன செயலிகளில் முதலீடு செய்பவர்கள் பணத்தை இழப்பது தடுக்கப்படாவிட்டால், பணத்தை இழந்தவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் அவலம் ஏற்படும். அதற்கு முன்பாக தமிழக அரசும், காவல்துறையும் அதிரடி நடவடிக்கை எடுத்து மக்களையும், அவர்களின் பணத்தையும் காப்பாற்ற வேண்டும். மக்களின் பணத்தை ஆசை காட்டி பறித்து ஏமாற்றும் சீன நிறுவனங்களின் செயலிகளை தடை செய்ய வேண்டும். சீன செயலிகளை இயக்கும் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் மோசடிக்கு துணையாக இருப்பவர்களை கண்டுபிடித்து கைது செய்ய வேண்டும்" என அதில் கூறப்பட்டுள்ளது.

# அமெரிக்கா புறப்பட்டார் ரஜினிகாந்த் ஒரு மாதம் ஓய்வெடுப்பதற்கு திட்டம்

சென்னை, ஜூன் 20

மருத்துவச் சிகிச்சைக்காக நடிகர் ரஜினிகாந்த் தனி விமானத்தில் சென்னையிலிருந்து நேற்று அதிகாலை அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார்.



2016 ஆம் ஆண்டு அமெரிக்காவில் ரஜினிகாந்த் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்துகொண்டார். அதன் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் அமெரிக்காவுக்குச் சென்று உடல் நிலை குறித்து பரிசோதனை செய்து கொள்வார். இறுதியாக 2019 ஆம் ஆண்டு அமெரிக்கா சென்று அவரது உடல்நிலை குறித்து பரிசோதனை செய்துகொண்டார்.

அதன்பிறகு, கடந்த ஆண்டு கொரோனா ஊரடங்கின் காரணமாக உலகநாடுகள் அனைத்தும் வெளிநாட்டு பயணிகளின் வருகையை தடை செய்திருந்தன. அதன் காரணமாக, ரஜினிகாந்த்தால் கடந்த ஆண்டு அமெரிக்கா சென்று மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள முடியவில்லை. தற்போது ரஜினிகாந்த் ஒரு மாத காலம் அமெரிக்காவில் தங்கி ஓய் வெடுக்க அவர்திட்டமிட்டு இருக்கிறார்.

நேற்று அதிகாலை 3:00 மணிக்கு சென்னை விமான நிலையத்திலிருந்து துபாய் செல்லும் விமானத்தில் அவர்புறப்பட்டு சென்று இருக்கிறார். அங்கிருந்து வேறு விமானம் மூலமாக அமெரிக்கா செல்கிறார். ஹாலிவுட் படப்பிடிப்பு காரணமாக நடிகர் தனுஷும் அவரது மனைவி ஐஸ்வர்யாவும் அமெரிக்காவில் இருக்கின்றனர். அவர்கள் ரஜினியுடன் இருந்து அவரை பார்த்துக் கொள்வார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஒரு மாத ஓய்வுக்குப் பின்பு ரஜினி திரும்பி வந்தவுடன் அண்ணாத்த படத்தின் சில காட்சிகளுக்கான படப்பிடிப்பில் கலந்துகொள்வார்.

# சிவங்கர் பாபாவின் முன்னாள் மாணவி கைது பாபாவுக்கு மருத்துவமனையில் சிகிச்சை

சென்னை, ஜூன் 20

சிவசங்கர் பாபா நடத்திவரும் சுஷில் ஹரி பள்ளியின் முன்னாள் மாணவி சுஷ்மிதா நேற்று -முன்தினம் கைது செய்யப்பட்டிருக்கிறார். அதேவேளை சிவசங்கர் பாபாவின் உடல் நிலை மோசமானதையடுத்து அவர் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.



சுஷ்மிதா கேளம்பாக்கத்தில் இருக்கும் பள்ளி வளாகத்திலேயே குடும்பத்தோடு வசித்து வருகிறார். நேற்று முன்தினம் கேளம்பாக்கம் பள்ளி வளாகத்தில் சிபிசிஐடி குழுவினர் சென்று ஆய்வு நடத்தினார்கள். அப்போது சுஷில் ஹரி பள்ளி வளாகத்திலேயே தங்கியுள்ள ஆசிரியர்கள் முன்னாள் மாணவி சுஷ்மிதாவையும் சென்னை சிபிசிஐடி அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றனர்.

ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட மூன்று வழக்குகளில் ஒன்றில் சுஷ்மிதா பெயரும் சேர்க்கப்பட்டிருந்தது. இந்நிலையில் ஆசிரியர்கள் இருவர், சுஷ்மிதா ஆகியோரிடம் சென்னை சிபிசிஐடி அலுவலகத்தில் வைத்து சுமார் 5 மணி நேரமாக விசாரணை நடந்தது. இந்த விசாரணைக்குப் பின்னர் அப்பள்ளியின் முன்னாள் மாணவி சுஷ்மிதாவும் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இதே நேரம், செங்கல்பட்டு கிளைச் சிறையில் இருந்து செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட சிவசங்கர் பாபா, நேற்று முன்தினம் இரவு திடீரென உடல் நிலை மோசமானதாக கூறி சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

# பாராளுமன்றம் வருகிறார் பஸில்!

## நிதி அமைச்சு பதவியும் ஒப்படைப்பு!!



**கொழும்பு, ஜூன் 20**
**அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய பின்னர், பாராளுமன்ற உறுப்பினராக பஸில் ராஜபக்ஷ சத்தியப்பிரமாணம் செய்வா ரென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன என்று பிரபல சிங்கள இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றதும் பஸில் ராஜபக்ஷவுக்கு நிதி அமைச்சு பதவி வழங்கப்படவுள்ளது எனவும், அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் மேற்படி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வருவதற்காக பதவி துறக்கவுள்ள பாராளுமன்ற உறுப்பினருடன் இவ்விவகாரம் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துரையாடியுள்ளார் எனவும் குறித்த இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா சென்றுள்ள பஸில் ராஜபக்ஷ எதிர்வரும் 23 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார்.

# ரணிலுடன் அரசு 'டீலா'?

## நாமல் வழங்கிய பதில்



கொழும்பு, ஜூன் 20
"ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் உட்பட எதிர்க்கட்சிகளின் தலைவர்களுடன் அரசுக்கு எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் கிடையாது." - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும், அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கம்பஹாவில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர், அமைச்சர் கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை, எரிபொருள் விலை உட்பட சமகால விவகாரங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்களால் எழுப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இவை குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு,

"எரிபொருட்களின் விலையை அதிகரிப்பது தொடர்பில் வாழ்க்கைச்செலவு தொடர்பான அமைச்சரவை உப குழு முடிவெடுத்தது. அது தொடர்பில் ஜனாதிபதி அறிக்கையொன்றை விடுத்திருந்தார். எதிர்காலத்தில் விலை உயர்வில் மாற்றங்கள் ஏற்படுமாயின் அது தொடர்பில் கலந்துரையாடி முடிவெடுக்கப்பட்டு உரியவகையில் தீர்மானம் அறிவிக்கப்படும்.

அமைச்சர் கம்மன்பிலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவருவதற்கு முன்னர் தமது தலைவர் ரணிலா, சஜித்தா என்பது குறித்து ஐக்கிய மக்கள் சக்தி முடிவுக்கு வரவேண்டும். தமது பிரச்சினையை தீர்த்துக்கொண்டே பிறர்மீது கவனம் செலுத்த வேண்டும்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பியின் தலைவர் அநுர கமார திஸாநாயக்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுடன் எமக்கு எவ்வித கொடுக்கல், வாங்கல்களும் கிடையாது."- என்றார்.

# ரயில் சேவைகள் மீள ஆரம்பம்!

கொழும்பு, ஜூன் 20
பயணத் தடை நாளை திங்கள் கிழமை தளர்த்தப்படுகின்ற நிலையில் ரயில் சேவைகள் மீள இடம்பெறவிருப்பதாக ரயில் திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இதன்போது, கடந்த காலங்களில் மாகாணங்களுக்கிடையே பின்பற்றப்பட்ட முறையே இந்த தடவையும் பின்பற்றப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாளை காலை பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டு, மீண்டும் எதிர்வரும் 23ஆம் திகதி இரவு 10 முதல் 25ஆம் திகதி அதிகாலை 4 மணி வரையில் நடைமுறைப்படுத்தப்படும்.

அதேவேளையில் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்கு தடை தொடர்ந்தும் இருக்கும் எனவும் பஸ் சேவைகள் தொடர்பாக இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் விடயத்துக்கு பொறுப்பான அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

# கடற்பரப்புகளில் காற்றின் வேகம் அதிகரிக்கும் நிலை

கொழும்பு, ஜூன் 20
மேல், மத்திய, சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சிறிதளவில் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சீரான வானிலை நிலவும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படுவதுடன் இந்தப் பிரதேசங்களில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கொழும்பில் இருந்து காலி ஊடாக மாத்தறை வரையான கடற்பரப்புகளில் சில இடங்களில் மழை பெய்யலாம்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென் மேற்கு அல்லது மேற்கு திசையில் இருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படுவதுடன், காலியில் இருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் புத்தளத்தில் இருந்து மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகம் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

காலியில் இருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளும் புத்தளத்தில் இருந்து மன்னார் வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

# வடக்கில் திருமண நிகழ்வுகளுக்கு இனிமேல் அனுமதி வழங்கப்படா

யாழ்ப்பாணம், ஜூன் 20
வடக்கில் வரையறுக்கப்பட்ட திருமண நிகழ்வுகளிற்கு வழங்கப்படும் அனுமதியை தற்காலிகமாக நிறுத்த சுகாதாரத்துறை அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

வடமாகாண ஆளுநரினால் விடுக்கப்பட்ட பணிப்புரைக்கமைய, சுகாதார அதிகாரிகள் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர்.

அண்மைக்காலமாக திருமணங்கள் மூலமாகவே கொரோனா பரவல் ஏற்பட்டுள்ளதையடுத்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்பட்டது.

திருமண நிகழ்வுகளுக்கு மணமக்கள் உள்ளிட்ட 15 பேருக்கு சுகாதாரத்துறையினர் அனுமதி வழங்கி வருகிறார்கள். எனினும் அநேகமான சந்தர்ப்பங்களில் மக்கள் இந்த வாய்ப்பை துஷ்பிரயோகம் செய்கிறார்கள். திருமண வீட்டில் சிக்கிய பலர் என்பது அன்றாட செய்தியாகிவிட்டது.

அண்மையில் திருமண வீடுகளில் இரகசியமாக பெருமளவானவர்கள் கூடிய சந்தர்ப்பங்களில் கொரோனா பரவல் கண்டறியப்பட்டுள்ளது.

இதையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பயணத்தடை நீக்கப்படும் வரை இந்த தீர்மானம் நடைமுறையில் இருக்கும்.

# தொற்று நோய்ப் பிரிவின் பிரதானிக்கு இடமாற்றம்!

கொழும்பு, ஜூன் 20
சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவின் பணிப்பாளர் சுதத் சமரவீரவுக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி சுகாதார அமைச்சின் டெங்கு நோய் தடுப்பு பிரிவின் பணிப்பாளராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், வைத்தியர் சமித கினிகே தொற்று நோய் பிரிவின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கொவிட் - 19 தொடர்பான தகவல்களை வெளியிடுவது தொடர்பில் வைத்தியர் சுதத் சமரவீரவுக்கு எதிராக பல தரப்பினரும் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர், சமூகத்தொற்றை மூடி மறைக்கின்றார் என அரச வைத்திய அதிகாரி சங்கம்கூட சாடியிருந்தது.

கொரோனா மரணங்கள் தொடர்பில் வெளியிடப்பட்டிருந்த தரவுகள் சம்பந்தமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அதிருப்தியை வெளியிட் டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அவருக்கு திடீர் இடமாற்றம் வழங்கப் பட்டுள்ளது.

# மூன்று கடல் ஆமைகள், ஒரு டொல்பின் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கின

மட்டக்களப்பு, ஜூன் 20
மட்டக்களப்பு கிரான்குளம் பகுதியில் உயிரிழந்த நிலையில் 3 கடல் ஆமைகளும் ஒரு டொல்பின் மீனும் நேற்று கரையொதுங்கியுள்ளன.

இன்னும் பல ஆமைகள் கடலில் அடைந்து வருவதாகதாக நேற்று கடல் தொழிலுக்கு சென்று திரும்பிய மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 21 ஆம் திகதி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் தீ பரவியதிலிருந்து இதுவரை 40 இற்கும் மேற்பட்ட கடலாமைகளின் உடல்களும் 05 டொல்பின்களின் உடல்களும் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் கரையொதுங்கியுள்ளன.

கடற்றொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரிகள், கடல் சுழல் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் உட்பட்ட அதிகாரிகள் இதனைப் பார்வையிட்டனர்.

இறந்த நிலையில் கரையொதுங்கிய டொல்பின் உள்ளிட்ட கடலாமைகளை பகுப்பாய்விற்காக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கொண்டு சென்றுள்ளனர்.

# பயணக் கட்டுப்பாட்டை தளர்த்துவது பேராபத்து!

## சுகாதார நிபுணர்கள் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 20

**நாட்டை முடக்கி கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ள சூழலில் பயணக் கட்டுப்பாட்டை தளர்த்துவது பேராபத்தானது என சுகாதார நிபுணர்கள் கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளனர்.**

**அத்தோடு, வைரஸ் தொற்று வேகமாக பரவக்கூடிய அச்சுறுத்தல் உள்ளது எனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

நாட்டில் தற்போது அமுலில் உள்ள பயணக் கட்டுப்பாடுகள் எதிர்வரும் 21ஆம் திகதி தளர்த்தப்படும் என அரசு அறிவித்துள்ள நிலையிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸின் மிக மோசமான தொற்றாகக் கருதப்படுகின்ற பி.1.617.2 என அடையாளப்படுத்தப்படும் இந்தியாவில் பரவும் 'டெல்டா' வைரஸ் பரவல் இலங்கையில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது குறித்த விசேட கவனம் செலுத்தப்படவேண்டும் என்று சுகாதார, வைத்திய நிபுணர்கள் நேற்று முன்தினம் கூடிய கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில் தெரிவித்துள்ளனர்.

பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட வேண்டும் என்பதற்கு அரசிடம் இருக்கும் ஒரே சாட்டு நாட்டின் பொருளாதார நெருக்கடி என்ற காரணி மட்டுமே. அதனை நாம் நிராகரிக்கவில்லை. ஆனால், மக்களின் உயிர் பாதுகாப்பு என்பது நாட்டின் பொருளாதார நெருக்கடியை விடவும் முக்கியமானது. இப்போது பயணக் கட்டுப்பாட்டை தளர்த்துவதால், கொரோனா வைரஸ் தொற்று மிக வேகமாகப் பரவ இரண்டு நாட்கள் போதுமானதாக இருக்கும். எனவே, நிலைமைகளைப் புரிந்துகொண்டு எமது கருத்துக்குச் செவிமடுக்க வேண்டும் எனவும் சுகாதார நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

# தேசிய கொரோனா மரண வீதத்தைவிட வடக்கில் இறப்பு வீதம் மிக அதிகம்!

கொழும்பு, ஜூன் 20

நாட்டில் கொரோனா தொற்றினால் உயிரிழப்பவர்களின் தேசிய வீதத்தை விட வட மாகாணத்தினதும், யாழ். மாவட்டத்தினதும் வீதங்கள் அதிகமானவை என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

நாட்டில் நேற்று முன்தினமும் 55 கொரோனா மரணங்கள் பதிவாகியிருந்தன. இதில் 23 பெண்களும், 32 ஆண்களும் உள்ளடங்குகின்றனர். நாட்டில் இதுவரை 2,480 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

இலங்கையில் கொரோனா தொற்றினால் உயிரிழப்பவர்களின் வீதம் 0.9 ஆகும்.

நேற்று முன் தினம் வரை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 63 ஆகும். இது 1.6 வீதமாகும்.

வட மாகாணத்தின் இறப்பு வீதம் 1.4 ஆகும்.

# தனிமைப்படுத்தலை மீறிய 1,281 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 20

கடந்த 24 மணித்தியாலத்தில் மாத்திரம் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 1,281 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முகக்கவசம் அணியாமை, சட்டவிரோதமான முறையில் மாகாண எல்லைகளை கடந்தமை மற்றும் சமூக இடைவெளி பேணாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

பயணக் கட்டுப்பாடுகள் அமுலில் இருக்கும் காலப்பகுதியில் விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண எச்சரித்துள்ளார்.

# தேங்காய் ஒன்றுக்கு விதிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலை ரத்து

கொழும்பு, ஜூன் 20

தேங்காய் ஒன்றுக்கான அதியுச்ச நிர்ணய விலையை அறிவித்து நுகர்வோர் விவகார அதிகார சபையினால் கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இரத்து செய்யப்பட்டுள்ளது.

13 அங்குலத்துக்கு அதிகமான தேங்காயை 70 ரூபாவுக்கும் 12 முதல் 13 அங்குலம் வரையான தேங்காயை 65 ரூபாவுக்கும் 12 அங்குலத்திற்கு குறைவான தேங்காயை 60 ரூபாவுக்கும் விற்பனை செய்ய கடந்த ஆண்டு தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் அளவு அடிப்படையில் தேங்காய்க்கான நிர்ணய விலை தொடர்பாக கடந்த ஆண்டு வெளியிட்ட குறித்த வர்த்தமானி அறிவிப்பு இரத்து செய்வதாக நுகர்வோர் விவகார அதிகார சபை நேற்று அறிவித்துள்ளது. (அ)

# பத்மநாபாவின் நினைவுதினம் அனுஸ்டிப்பு!

வவுனியா, ஜூன் 20

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் க.பத்மநாபா மற்றும் மரணித்த போராளிகளின் 31 ஆவது நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியாவில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பத்மநாபாவின் திருவுருவ படத்துக்கு தீபம் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முக்கியஸ்தர் கே.அருந்தவராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன்,வவுனியா நகர சபைத்தலைவர் இ.கௌதமன், கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

# 'டெல்டா' திரிபு வைரஸிலிருந்து மூன்று பேர் மீண்டெழுந்தனர்

கொழும்பு, ஜூன் 20

கொழும்பு, தெமட்டகொடை பிரதேசத்தில் இருந்து இந்தியாவின் 'டெல்டா' திரிபு வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்த மூவர் குணமடைந்துள்ளதாகவும் மேலும் இருவர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெமட்டகொடை பிரதேசத்தில் 'டெல்டா' திரிபுடன் அடையாளம் காணப்பட்ட 5 தொற்றாளர்களில் 3 பேர் குணமடைந்துள்ளனர். 2 பேர் மாத்திரமே தொடர்ந்தும் சிகிச்சைப் பெற்று வருவதாக கொழும்பு மாநகரசபையின் பிரதம மருத்துவ அதிகாரி வைத்தியர் ரு வான் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

அதேவேளை 'டெல்டா' திரிபுடன் அடையாளம் காணப்பட்ட யாரும் கொவிட் 19 தடுப்பூசியை செலுத்திக் கொண்டவர்கள் இல்லை. எனவே பொதுமக்கள் கொவிட் தடுப்பூசியை பெற்றுக் கொள்வதை புறக்கணிக்கவேண்டாம் எனவும் அவர் தெரிவித்தார்.

# 40 இலட்சத்துக்கு மேற்பட்ட கொவிட் தடுப்பூசி இறக்குமதி

கொழும்பு, ஜூன் 20

இலங்கைக்கு இதுவரை 40 இலட்சத்துக்கு மேற்பட்ட கொவிட் - 19 தடுப்பூசிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள நிலையில் கையிருப்பாக உள்ள தடுப்பூசிகள் அதி தொற்று அபாயப் பகுதி மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு இதுவரை 40 இலட்சத்துக்கும் அதிகமான கொவிட்-19 தடுப்பூசிகள் இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் வைத்தியர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

மேலும் 4 மில்லியன் தடுப்பூசிகள் அடுத்த மாதம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

தற்போது இருப்பில் உள்ள தடுப்பூசிகளைக் கொண்டு அதிகளவில் ஆபத்துள்ள பகுதிவாழ் மக்களுக்கு தடுப்பூசிகளை செலுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# முல்லைத்தீவு கூழாமுறிப்பு பாடசாலையில் தீ பரவல்!



முல்லைத்தீவு, ஜூன் 20

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கூழாமுறிப்பு அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் ஏற்பட்ட தீ விபத்தினால் வகுப்பறைக் கொட்டில் ஒன்று முற்றாக எரிந்தழிந்துள்ளது.

நேற்று நண்பகல் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தீயைக் கட்டுப்படுத்த கிராமத்து மக்கள் முயன்ற போதிலும் அதனைக் கட்டுப்படுத்த முடியவில்லை என தெரிவிக்கப்பட்டது.

தீப் பரவலுக்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தீயணைப்பு வாகனங்கள் எதுவும் சேவையில் இல்லாமையால் அடிக்கடி இவ்வாறான அனர்த்தங்கள் நிகழும் போது அழிவுகளைத் தவிர்க்க முடியாத அவல நிலை தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஹெரோயின் போதைப்பொருளுடன் உப பொலிஸ் பரிசோதகர் கைதானார்

கொழும்பு, ஜூன் 20

ஹெரோயின் போதைப் பொருளுடன் களுத்துறை தெற்கு உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த உப பொலிஸ் பரிசோதகர் சீருடையில் இருந்த போது ஹெரோயின் போதைப்பொருளுடன் ஹிக்கடுவ பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட உப பொலிஸ் பரிசோதகரிடம் இருந்து 50 கிலோகிராம் ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செய்தியின் பின்னணியில்...



# மாகாண சபையும் நமது அரசியல்வாதிகளும்

மாலி

பிரிட்டிஷ் முடியாட்சியின் சோல்பரி அரசியலமைப்பை அகற்றி, இலங்கையில் குடியரசு அரசியலமைப்பை உருவாக்கவும், உள்ளூரில் பாரிய தேசியமயமாக்கல்களுடன் அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையுமாக, சிறிலங்கா சுதந்திர கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க, இடதுசாரி கட்சிகளான லங்கா சமசமாஜ கட்சியுடனும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடனும் இணைந்து அமைத்த ஐக்கிய முன்னணி, 1970 தேர்தலில் பெருவெற்றியீட்டியது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க புதிய அரசியலமைப்பு யாப்புக்கான நடவடிக்கைகளைத் தொடங்கினார். சட்ட வல்லுநரும் புகழ்பெற்ற ரொற்ஸ்கியிச வாதியுமான கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா அரசியலமைப்பு விவகார அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

சிறுபான்மை இனங்களின் மொழி, மதம் உட்பட அவர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதிலோ அல்லது அவற்றில் கவனம்கொள்வதிலோ புதிய அரசியலமைப்பு குழுவின் புறக்கணிப்பை தெளிவாக உணர்ந்ததில், அக் குழுவில் இடம்பெற்றிருந்த தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் சில மாதங்களிலேயே அதிலிருந்து வெளியேறினார்.

புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாகும் அந்த வேளையில், இலங்கையில் தமிழ் இனத்தின் எதிர்காலம் தொடர்பில் ஓர் அபாயச் சங்கு ஊதப்பட்டது. அந்தச் சங்கொலியில் கூடி, உருவானது தமிழர் கூட்டணி. (பின்னர் அது, தமிழர் விடுதலைக் கூட்டணியானது.)

தனித்தனி கட்சிகளான இலங்கை தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி என்பவை ஒன்றிணைந்தன. பெருந் தலைவர்களான எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஜீ. ஜீ. பொன்னம்பலம், எஸ். தொண்டமான், ‘அடங்காத் தமிழன்’ சி. சுந்தரலிங்கம் எல்லோரும், காலம் உணர்த்திய ஒரு தருணத்தில், இனத்தின்பாற்கொண்ட பொறுப்புணர்வான அக்கறையில் ஒன்றிணைந்தார்கள். காழ்ப்பு எதுவுமின்றி ஒன்றிணைந்தார்கள். கடைசிவரை ஒன்றிணைந்தார்கள். இதை, இலங்கைத் தமிழ் இனத்துக்கு ஒரு வரலாற்று பாடமாக - வேதமாக அந்த தலைவர்கள் போதித்து, உணர்த்திச்சென்றனர்.

அவர்களின் இந்த ஒற்றுமைதான் இலங்கையில் ஆயுத போராட்டம் எப்படியோ தோன்றி, வலுப்பெறவும் ஆதாரமானது. அந்த வேளையில், இராஜதந்தர ரீதியிலான தீர்வு முயற்சிகள் தோற்றுப்போனால், தீவிரவாத தமிழ் இயக்கங்களுக்கு ஆதரவாக இராணுவ தலையீடு தொடர்பிலும் இந்தியா முடிவெடுக்க நேரும் என்று பிரதமர் இந்திரா காந்தி, ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு விடுத்த எச்சரிக்கையின் விளைவாக, பின்னர் ராஜீவ் காந்தி காலத்தில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த இந்திய அழுத்தத்தால் ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்பின் 13ஆவது திருத்தமும், இலங்கைத் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வில் ஒரு படிக்கல்லாக உருவாக்கப்பட்ட மாகாண சபைகளும் இப்போது இலங்கை அரசின் திட்டமிட்ட இராஜதந்தர நடவடிக்கைகளால் படிப்படியாக செயலிழக்கப்பட்டுவருகையில், இப்போது வெளிப்படையாக, மாகாண சபைகளின் வைத்தியசாலைகளும் பாடசாலைகளும் தேசிய வைத்தியசாலைகளாகவும் பாடசாலைகளாகவும் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டும் அப்படியே முழுமையாக இணைக்கப்பட்டு, இணைந்த ஒரே மாகாணசபையும் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

‘உலக்கை தேய்ந்து உளிப் பிடி’ ஆவதுபோல இம் மாகாண சபையை ஆக்குவதில் அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முற்றிலும் வழிசமைத்து, ஆதரவாகவும், அமைதியாகவும் இருந்தவர்கள் - இருப்பவர்கள் நமது அரசியல்வாதிகள். ஆனால் என்னவோ இப்போது, இந்த வைத்தியசாலைகள், பாடசாலைகள் விவகாரத்தில் இவர்களின் குரல் கேட்கிறது.

இந்தியா, கூடவே ஓர் அரசியல் நோக்குடனும் தான் இந்த விவகாரத்தில் தலையிட்டது. அதில் இரகசியமுமில்லை தவறும் இல்லை. நமது அரசியல் தலைவர்களும் அப்போது இதனை தெளிவாகவே புரிந்துகொண்டுமிருந்தார்கள். ஆனால், தற்போதைய தமிழ் அரசியல் வாதிகள் தொடர்பில் இதுதொடர்பிலான புரிதல் கேள்வியை எழுப்புகிறது.

அந்தக் காலத்தில் சீன சார்பு, மொஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சிகள் தமிழ் மக்கள் மத்தியிலும் இருந்தன. ‘புளோட்’ தலைவர் சித்தார்த் தனின் தந்தையாரான மானிப்பாய் எம். பி., வி. தர்மலிங்கம், மொஸ்கோ நட்புறவு சங்கத்தின் தலைவராகவுமிருந்தார். ஆனால், இன்றைய உலக, இலங்கை அரசியல் சூழலில், தமிழ் அரசியல் தலைவர் ஒருவர், சீன - இலங்கை பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் துணைத் தலைவராவது, தமிழ் மக்களின் அரசியலுக்கு எந்த விதத்தில் உகந்தது? தங்களுடைய மக்களுக்கான அரசியலில் கொண்டுள்ள கரிசனையை இது எந்த விதத்தில் வெளிப்படுத்துகிறது?

குடியரசு அரசியலமைப்பு உருவாக்கத்தில் ஒலித்ததான அபாயச் சங்கின் ஒலி சில காலமாகவே கேட்டுக்கொண்டுதானிருக்கிறது. வைத்தியசாலைகள், பாடசாலைகள் விவகாரத்தில் அதன் ஓசை அதிகரித்திருக்கிறது போலும்! அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அது தெளிவாக கேட்பதை அவர் சொல்கிறார். மற்றைய நமது அரசியல்வாதிகளுக்கும் அது இப்போது இலேசாக கேட்கிறது. ஆனால், புரிகிறதோ தெரியாது.

புரிந்தால், தங்களுக்கான சொந்த அரசியலை விடுத்து, மக்களுக்கான அரசியலில், அந்த பெருந் தலைவர்கள் கற்பித்த நெறியில் ஒழுக, அவர்கள் இன்றே தலைப்படுவார்கள்.

ஈழநாடு



# ஐரோப்பிய ஒன்றிய தீர்மானமும் தமிழர்களுக்கான வாய்ப்புகளும்

பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம்



**ஐரோப்பிய ஒன்றியத்தின் நகர்வு ஐரோப்பிய - அமெரிக்க நலன்களை முன்னிறுத்தினாலும் இலங்கை தமிழர் தொடர்பான இலங்கை அரசின் போக்கில் காணப்படும் நெருக்கடிகளை கையாளுவதற்கான உத்தியாக தெரிகின்றது. ஒரு வகையில் இலங்கை தமிழர் தொடர்பான பிரச்னை மிகப்பிரதான அம்சமாக விளங்குவது பயங்கரவாத தடைச் சட்டம் ஆகும்.**

அமெரிக்க காங்கிரஸ் தீர்மான முன்மொழிவை அடுத்து ஐரோப்பிய ஒன்றியம் பலமான ஒரு தீர்மானத்தை இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக முன்வைத்துள்ளது. அது பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிராக ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை நிறுத்தப்போவதாக அறிவித்துள்ளது. இத்தகைய தீர்மானத்தை ஐரோப்பிய பாராளுமன்றம் 628 வாக்குகளால் நிறைவேற்றியுள்ளது. 40 உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை 17 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்துள்ளனர். எனவே, இது ஒரு பெரும் ஆதரவுத் தளத்தை தந்துள்ளது. ஐரோப்பிய நாடுகள் மத்தியில் இலங்கை விடயம் அதிக தெளிவான உரையாடலை ஏற்படுத்தியுள்ளது. புலம்பெயர்ந்த தமிழ் மக்களது தீவிரமான அரசியல் நடவடிக்கைகளே இத்தகைய அணுகுமுறைக்கு ஒரு காரணமாக தெரிகிறது. இந்தக் கட்டுரையும் ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவையும் புலம்பெயர் அமைப்புக்களின் நகர்வையும் மையப்படுத்தியதாக அமையவுள்ளது.

ஜி.எஸ்.பி. வரிச்சலுகை என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் தென்பூகோள நாடுகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் ஏற்றுமதிப் பொருட்களுக்கு வழங்கப்படும் வரிச்சலுகை முறைமையாகும். அதாவது வரி முழுமையாக அறவிடப்படாமை அல்லது பூச்சிய வரி முறைமை மூலமாக ஐரோப்பிய சந்தைக்குள் பொருட்களை அனுமதிப்பதாகும். இதன்மூலம் போட்டி குறைவதுடன் அதிகமான அந்நிய செலவாணியும் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை தென்பூகோள நாடுகள் அடைகின்றன. 2010ஆம் ஆண்டிலிருந்து இலங்கை இவ்வரிச்சலுகை தொடர்பான நெருக்கடியை எதிர்கொண்டிருந்தது. 1971ஆம் ஆண்டிலிருந்து இலங்கை இவ்வரிச்சலுகையை அனுபவித்து வருகிறது. ஆனால், அது முழுமையான வரி விலக்காக அமையவில்லை. 2005ஆம் ஆண்டி லிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட GSP10 (Generalized Scheme of Performance 10) முழுமையான வரிச்சலுகையை அனுபவித்து வருகிறது.

இத்தகைய நடைமுறை 2005ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்த அரசாங்கத்தின் மனித உரிமைகள் மீறல்களை முன்னிறுத்தி நிறுத்தப்பட்ட சலுகை 2017ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்க காலப்பகுதியில் மனித உரிமையை பேணுதல் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தை விலக்கு தல் என்ற உறுதிமொழியோடு விலக்கு அளிக்கப் பட்டது. இதற்கான தடையை மீள மேற்கொள்ளப் போவதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிவித்துள்ளது. இத்தகைய அறிவிப்பின் நோக்கங்களை தேடுதல் மிகமுக்கியமான விடயமாகும்.

முதலாவது, அமெரிக்க காங்கிரஸின் முன்மொழிவானது ஆரம்ப நிலையில் இருப்பது போல் அல்ல ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானம். சற்று தீவிர தன்மையுடன் மிகப்பெரும்பான்மை ஆதரவுடன் ஐரோப்பிய ஒன்றியத்தின்பாராளுமன்றம் இலங்கை தமிழர்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் முன்வைத்த பயங்கரவாத தடைச்சட்டத்தை பிரதான விடயமாக எடுத்துகொண்டுள்ளது. இது இலங்கைக்கு எதிரானது என்பதை கடந்து நல்லாட்சி அரசாங்கத்துடன் ஒப்பிடும் போது தற்போதைய அரசாங்கத்தின் வெளியுறவுக்கொள்கை பற்றியதாகவே அமைந்துள்ளது என்பது தெளிவாகிறது. அதாவது தற்போதைய இலங்கை அரசாங்கம் சீனச் சார்பு வெளியுறவுக்கொள்கையை முதன்மைப்படுத்தி இருப்பது பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒரு காரணியாக ஐரோப்பிய ஒன்றியம்முன்னெடுத்திருப்பது வழிவகுத்துள்ளது என்பது புலனாகின்றது. எனவே, ஐரோப்பிய ஒன்றியம் அமெரிக்காவுடன் இணைந்து இலங்கையின் வெளிவிவகாரத்தில் மாற்றத்தை செய்வதற்கான அழுத்தத்தை கொடுக்க திட்டமிட்டுள்ளது.

இரண்டாவது, இத்தகைய அழுத்தம் இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தை முற்றாக தவிர்க்க உதவுமா? என்பது பிரதான கேள்வியாகும். எனவேதான் ஐரோப்பிய ஒன்றியத்தின் நகர்வு ஐரோப்பிய - அமெரிக்க நலன்களை முன்னிறுத்தினாலும் இலங்கை தமிழர் தொடர்பான இலங்கை அரசின் போக்கில் காணப்படும் நெருக்கடிகளை கையாளுவதற்கான உத்தி யாக தெரிகின்றது. ஒரு வகையில் இலங்கை தமிழர் தொடர்பான பிரச்னை மிகப்பிரதான அம்சமாக விளங்குவது பயங்கர வாத தடைச் சட்டம் ஆகும். இதனை அகற்றுவதன் மூலம் இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு தீர்வு ஏற்படுத்த முடியாத போதிலும் தற்காலிக நெருக்கடியிலிருந்து இலங்கை அரசாங்கத்தின் அணுகுமுறைகளில் மாற்றங் களை உருவாக்க முடியும். அதனூடாக ஐரோப்பிய - அமெரிக்க தலையீட்டை ஏற்படுத்த முயல்கின்றமையைக் காணமுடிகிறது.

மூன்றாவது, இத்தகைய ஜி.எஸ்.பி வரிச்சலுகை நிறுத்தப்படுவது இலங்கையின் பொருளாதாரத்தை பாதிக்கும் என்ற வரலாறு கடந்த முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ ஆட்சிக்காலத்திலும் நிகழ்ந்த பாதிப்பாகவே தெரிகிறது. ஆனால், அத்தகைய பாதிப்பை தற்போதுள்ள அரசாங்கம் கருத்தில் கொள்ளும் என்பது கேள்விக்குரிய விடயமே. அல்லது கடந்த நல்லாட்சி அரசாங்கம் போன்று ஐரோப்பிய - அமெரிக்க நாடுகளுடன் ஒத்துழைக்கும் அரசாங்கமொன்று மீண்டும் ஆட்சிக்கு வருமாயின் ஜி.எஸ்.பி வரிச்சலுகை இலங்கைக்கு மீள வழங்கப்படும் என்ற அனுபவத்தை கடந்த காலம் தந்துள்ளது. காரணம், ஐரோப்பிய - அமெரிக்க அணுகுமுறைகள் அவ்வாறானதாகவே நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில்ஏற்படுத்தியுள்ளது.

நான்கு, ஒட்டுமொத்தமாக அவதானித்தால் கொழும்பு துறைமுகநகர சட்டமூலத்தின் பின்னர் இலங்கையின் போக்கு முழுமையாக சீனா சார்புடை யதாக இயங்க ஆரம்பித்துள்ளது என்பதுவே அமெரிக்க - ஐரோப்பாவின் இலங்கையுடனான முரண்பாட்டுக் கான காரணமாகும். இலங்கை அமெரிக்காவுடன் ஒத்துழைக்க மறுத்தமையானது அதன் மிலேனிய உடன் பாட்டை நிராகரித்திலிருந்து புரிந்து கொள்ளப்பட வேண்டும். சீனாவின் கொழும்பு துறைமுக நகரத்துக் குள் ஐரோப்பிய அமெரிக்க முதலீட்டை அங்கீகரிப்பது என்பதற்காக கொழும்பு அமெரிக்காவுடனும் ஐரோப் பாவுடனும் அரசியல் இராணுவ ரீதியாக உடன்படு கிறது என்பதல்ல. மாறாக சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளை இயங்க வைக்கிறது என்றே பொருள் கொள்ளப்பட வேண்டும். அனைத்துமே ஏகாதிபத்திய அரசுகளே அன்றி இலங்கைக்கானதோ தமிழருக்கானதோ நலனுக்கான அரசுகள் அல்ல. உலகளாவிய ரீதியில் அமெரிக்க - ஐரோப்பா கூட்டு எவ்வாறு அந்த நாடுகளை கையாளுதோ அதனையே இலங்கையிலும் அந்த நாடுகள் பின்பற்ற விளைகிறன.

ஆனால், சர்வதேச அரசியலில் எல்லா நாடுகளின் நகர்வுகள் அதிகார நலனை இலக்கு வைத்ததாகவே அமையும். அவ்வாறே அமெரிக்க - ஐரோப்பிய ஒன்றியத்தின் செயல்பாடுகளும் அமைகிறது. ஆயினும், அவ்வகை நகர்வுக்குள்ளேயே இலங்கை தமிழரின் இனப்பிரச்னைக்கான தீர்வும் அகப்பட்டுள்ளது. அதிலிருந்து கொண்டு மட்டுமே தீர்வை எட்ட முடியும். இந்தநிலை கடந்த பல தசாப்த காலத்தில் வளர்ச்சி பெற்றுள்ளது. அதிலும் தற்போதைய அரசாங்கங்கள் போன்று ஆட்சியில் அமருகின்ற மேற்குலகுக்கு எதிரான சீனா சார்பு அரசாங்கங்களினால் அத்தகைய தீர்வை எட்டலாம் என்ற சூழலை கடந்த கால அனுபவம் தந்துள்ளது. அது மட்டுமன்றி இலங்கையின் எல்லைக்குள்ளும் பிராந் திய அரசான இந்தியாவின் எல்லக்குள்ளும் இலங்கை தமிழர் நீடித்த இனப்பிரச்னைக்கான தீர்வை எட்டமுடி யும் என்ற நம்பிக்கை முற்றாக முடிவுக்கு வந்துள்ளது.

இதனால் இலங்கை - சீனா உறவு மேற்கு நலன்களை பாதிக்கும் வகையில் அமைவதால் இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வை தனது நலனுக்காக மேற்குலகம் முன்னிறுத்த முயலுகிறது. அதனை புலம்பெயர்ந்த தமிழரும் முதன்மைப்படுத்தி செயல்பட வேண்டிய தருணம் தவிர்க்க முடியாததாக எழுந்துள்ளது.

உள்நாட்டில் இலங்கை தமிழர்களுக்காக தலைமை தாங்கும் அரசியல் தலைமைகளும் அதன் கட்சிகளும் வெறுமனவே தேர்தல் கூட்டுக்காக உருவாக்கப்பட்ட குழுக்களாகவே காணப்படுகிறன. வடக்கு - கிழக்கு மக்களை தமக்கு வாக்களிக்க வைக்கும் மனோநிலையுடன் செயல்படுபவர்களாகவே அவர்களின் அணுகுமுறைகள் காணப்படுகிறன. அவர்கள் முன்வைத்துள்ள கொள்கைகளும், கோட்பாடுகளும் சுலோகங்களும், தேர்தல் வாக்குறுதிகள் மட்டுமே இலக்காகக் கொண்டவை. தமது தனிப்பட்ட நலனை முன்னிறுத்துகின்ற விதத்திலே பேச்சுக்களையும், பிரசாரங்களையும், நிவாரணங்களையும் தமக்கு இடையிலான பிரிவினைகளையும் கையாண்டு வருகின்றனர்.

தமிழர்களின் இனப்பிரச்னைக்கான தீர்வுக்குரிய சந்தர்ப்பம் கிடைக்கின்ற போதெல்லாம் அதனை கண்டுகொள்ளாமல் விடுவது அல்லது அதனை தோற்கடிப்பதற்காக உழைப்பது அதன்மூலம் தமது சுய தேவைகளை நிரப்பீடு செய்கின்றவர்களாகவே விளங்குகின்றனர். இதில் தேசியம் பேசியவர்களும், மாற்றென தம்மை அடையாளப்படுத்தியவர்களும், உதிரிகளாக செயல்படுபவர்களும் ஒரேமாதிரியான இயல்பு கொண்டவர்களாகவே காணப்படுகிறார்கள். அத்தகைய இயல்பூக்கம் கொண்ட அரசியல் குழுக்களோடு தமிழ் மக்கள் தேர்தல் நோக்கங்களுக்காக மட்டுமே பயணிக்க முடியுமே அன்றி இலட்சிய நோக்கத்திற்காக பயணிக்க முடியாத நிலையை ஏற்படுத்தி விட்டார்கள். அதனைக் கடந்து தீர்மானங்களையோ, வாய்ப்புக்களையோ, அதற்காக உழைக்கும் அரசியல் தலைமைகளாகவோ கொண்டிருக்கிறார்கள் என அவர்களை தமிழ் மக்கள் கருத முடியாத நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

நல்லாட்சி அரசாங்க காலத்தில் கிடைத்த வாய்ப்பை போல் மீண்டும் ஒரு சூழலை தமது தேர்தல் நலனுக்காக இந்தத் தேர்தல் குழுக்கள் தோற்கடிப்பதற்கு தயாராகி வருகின்றன. பேச்சுக்கான அழைப்பைக்கூட தமிழ் மக்களுக்கோ உலகுக்கோ வெளிப்படுத்தாதவர்களை தமிழர்களின் பிரதிநிதியென எவ்வாறு மதிப்பீடு செய்வதென்பது பிரதான கேள்வியாகும்.

எனவே ஜி.எஸ்.பி. வரிச்லுகை தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் ஐரோப்பிய பாராளுமன்ற நகர்வுகளை புலமைசார் உரையாடலை முதன்மைப்படுத்தி அதனை கையாளும் அரசியல் தரப்புக்கள் செயற்பட வேண்டும். இதில் நிச்சயமாக புலம்பெயர்ந்த தரப்புக்களே கரிசனை கொள்ளும் நிலை ஏற்பட்டுவிட்டது. உலகளாவிய அனுபவமும் அதுவாகவே தெரிகிறது. யூதர்களும் திபெத்தியரும் தமிழ் மக்களுக்கு முன்னோடியாக உள்ளனர். அத்தகைய அமைப்புக்கள் ஜனநாயகபூர்வமான அணுகுமுறைகளையும் அதற்கான உத்திகளையும் ஐரோப்பிய ஒன்றியம் சட்டதிட்டதிட்டத்துக்கு உட்பட்ட விதத்திலும் இயங்குவதற்கான முனைவுகளை கொள்ளுதல் அவசியம். புலத்தில் இருக்கும் தேர்தல் குழுக்களை அரவணைத்து செயற்படுவதென்பது தேர்தல் மாற்றங்களுக்கு மட்டுமாகவே அமையுமென் பதை புலம்பெயர் தரப்புக்கள் புரிந்து கொள்ளுதல் வேண்டும். எனவே அமெரிக்க ஐரோப்பிய ஒன்றியத் தின்இலங்கை மீதான அதிகார நலன் காணப்பட்டாலும் அதனூடாக இலங்கை தமிழர்களின் பிரச்னைக்கான தீர்வை அடை வதற்கான வாய்ப்பு உள்ளதென்பதை மறுக்க முடியாது. அதனை நோக்கிய அரசியல் அவசியமானது. **- நன்றி: அருவி** ■

# மோடி – ஸ்டாலின் சந்திப்பு:



# கடுமையாக விமர்சிக்கும் தமிழக பா.ஜ.கவினர்!

ஆ.விஜயானந்த்

பிரதமருடனான தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் சந்திப்பு குறித்து தமிழ்நாடு பா.ஜ.க நிர்வா கிகள், டுவிட்டரில் விமர் சனம் செய்து வருகின்றனர். இதற்கு தி.மு.கவினரும் பதிலடி கொடுத்து வருகின்றனர்.

முதல்வரின் டில்லி பயணத்தை பா.ஜ.க விவாதப் பொருளாக மாற்று வது ஏன்?

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் பணிகளில் தி.மு.க அரசு கவனம் செலுத்தி வருகிறது. இதன் காரணமாக, பிரத மரை சந்திப்பதில் தாமதம் ஏற்பட்டது. இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடியை 17 ஆம் திகதி மாலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பில், நீட் தேர்வு ரத்து, ஏழு பேர் விடு தலை, ஜி.எஸ்.டி நிலுவைத் தொகை, முல்லைப் பெரி யாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்துவது, கச்சத் தீவை மீட்பது, திருக்குறளை தேசிய நூலாக அறிவிப் பது, சேது சமுத்திர திட்டம் உள்ளிட்ட முக்கியமான கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்.

## தலை நிமிர்ந்ததா.. சரணாகதியா?

மேலும், இந்தச் சந்திப்பு குறித்து செய்தியாளர் களிடம் பேசிய ஸ்டாலின், "தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கு முழு ஒத்துழைப்பு தருவதாகப் பிரதமர் கூறியுள்ளார். இந்தச் சந்திப்பு மகிழ்ச்சியாகவும் மனநிறைவோடும் இருந்தது" என்று தெரிவித்தார்.

தமிழ்நாடு முதல்வரின் டில்லி பயணம் தொடர்பாக, #DelhiWelcomesStalin என்ற ஹேஷ்டேக் தேசிய அளவில் ட்ரெண்டானது.

இது தொடர்பாக டுவிட்டரில் பதிவிட்ட தமிழ்நாடு பா.ஜ.க மாநில பொருளாளர் எஸ்.ஆர்.சேகர், "ஆன்மிக வாதிகளை சந்தித்தால் மனமாற்றம் - தெளிவு கிடைக் கும். மோதியை சந்தித்து வெளியே வந்த மு.க.ஸ்டாலி னிடம் மனமாற்றம். அண்ணா. ஈ.வெ.ரா கொடுக்காத தெளிவை அண்ணன் மோடி கொடுத்துள்ளார்" என்றார். கூடவே, சூளவயடனைஔவழவயடஂளரசசநனெநச என்ற ஹேஷ்டேகையும் பதிவிட்டார்.

இதனை எதிர்த்து தி.மு.க நிர்வாகி ஒருவர், ஹதலை நிமிர்ந்தது தமிழ்நாடு" எனப் பதிவிட்டு பிரதமர் மோதி- ஸ்டாலின் சந்திப்புப் படங்களைப் பகிர்ந்திருந்தார். இதற் குப் பதில் அளித்த எஸ்.ஆர்.சேகர், "சரணாகதி அடைந் தது யார்? (தமிழ்நாட்டை) தலைநிமிர செய்தது யார் என்று ஓட்டு போட்ட மக்களுக்கு தெரியும்" எனக் குறிப்பிட் டிருந்தார். இதன் தொடர்ச்சியாக, முதலமைச்சர் ஸ்டாலின் டில்லியில் பயன்படுத்திய காரின் ரயருக்கு அடியில் எலுமிச்சம்பழம் வைக்கப்பட்டுள்ளது. இதுதான் பகுத்தறிவா எனச் சிலர் கேள்வியெழுப்பியிருந்தனர். "இந்தப் புகைப்படம் எடப்பாடி பழனிசாமியின் டெல்லி வருகையின்போது எடுக்கப்பட்டது. இந்தப் படத்தை எடுத்தது நான்தான்" என டில்லி ஊடக வியலாளர் ஒருவர் பதிவிட்டிருந்தார்.

## விமர்சித்தது ஏன்?

"சம்பிரதாயமான சந்திப்பை ஹசரணாகதி என விமர்சிப்பது சரியா?" என தமிழ்நாடு பா.ஜ.க மாநில பொருளாளர் எஸ்.ஆர்.சேகரிடம் கேட்டபோது,

"நாங்கள் இதனை பிரச்னைக்குரிய ஒன்றாக மாற்ற வில்லை. மத்திய அரசு எதைச் செய்தாலும் நெகட்டி வான ஒன்றாக மாற்றும் குணம் தி.மு.கவிடம் உள்ளது. அதனால், சம்பிரதாயமான இந்த சந்திப்பை, சரணாகதி எனப் பதிவிட்டால் அவர்களின் மனநிலை எப்படியி ருக்கும் என்பதை அறிவ தற்காகவே டுவிட்டரில் பதி விட்டேன்.

டில்லி சந்திப்பு தொடர்பாக தி.மு.கவினர் வெளியிட்ட பதிவுகளில், "தாமதமாகத் தானே டெல்லி செல்கிறார், இது சம்பிரதாயம்தானே" என்றெல்லாம் பேசி வருகின்றனர். பிரதமர் செய்யும் நல்ல விடயங் களையெல்லாம் தி.மு.கவினர் புண்படுத்தும்போது எங்களின் மனநிலை எப்படியிருக்கும்? அதனால்தான் அவ்வாறு பதிவிட வேண்டிய சூழல் வந்தது" என்கிறார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "எதிர்க்கட் சியாக இருக்கும்போது ஒரு வேடமும் ஆளும்கட்சியாக மாறிய பிறகு ஒரு வேடமும் போடுவதை தி.மு.கவினர் வழக்க மாக வைத்துள்ளனர். அதையே பிரதமர் சந்திப் பிலும் வெளிப்படுத்தியுள்ளனர். இந் தச் சந்திப்பில் 25 கோரிக்கைகளை ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். இதில் எதாவது புதிய விடயங்கள் இருக்கிறதா? முல்லைப் பெரியாறு, கச்சதீவு உள்ளிட்ட விவகாரங்கள் நீண்ட காலமாக இருப்பவை. "செங்கல்பட்டு தடுப்பூசி வளா கத்தை தமிழ்நாடே அரசே எடுத்து நடத்த வேண்டும்" என மே மாதம் 10 ஆம் திகதியே நாங்கள் குறிப்பிட் டுள்ளோம். அதில் தற்போது தி.மு.க ஆர்வமாக இருக்கிறது" என்று கூறினார் சேகர்.

## பிரதமர் உணர்த்திய விடயம்!

"தமிழ்நாடு வளர வேண்டும்" என்பதில் பா.ஜ.க அரசு உறுதியாக உள்ளது. தமிழ்நாட்டில் மத்திய அரசின் நிதி கள் செலவு செய்யப்படாமல் வெறும் அரசியல் மட்டும் நடப்பதாகவும் பிரதமர் நினைக்கிறார். அதனால்தான், "நேரடியாக எப்போது வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளலாம்" என ஸ்டாலினிடம் கூறியுள்ளார். இதில் முக்கியமான விடயங்களும் அடங்கியுள்ளன. தி.மு.க எப்போது பார்த்தாலும், "போராட்டம் நடத்துவோம், மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்போம், மனு கொடுப் போம்" என பின்பக்கமாகவே பேசி வருகின்றனர். இதனை மறுக்கும் வகையில், "உங்களுக்கு என்ன வேண்டுமோ கேளுங்கள்" எனப் பிரதமர் கூறியிருக்கிறார். மற்றபடி, சரணாகதி என நாங்கள் குறிப்பிட்டது அவர் கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்" என்கிறார்.

"முதலமைச்சரின் டில்லி பயணத்தை பா.ஜ.கவினர் விமர்சிப்பது ஏன்?" என தி.மு.கவின் சட்டத்துறை இணைச் செயலாளர் வீ.கண்ணதாசனிடம் கேட்டபோது,

"பா.ஜ.கவை பொறுத்தவரையில் அவர்கள் எந்தக் காலத்திலும் உண்மையை பேசுவதில்லை. எப்போதும் பொய்யான பரப்புரைகளை மேற்கொள்வது அவர்களின் வழக்கம். பிரதமரை முதலமைச்சர் ஸ்டாலின் சந்தித்தது குறித்து அவர்கள் பேசி வருவதையும் அவ்வாறுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவின் தயவில் நான்கு இடங்களில் அவர்கள் வெற்றி பெற்றுவிட்டனர். இதன் காரணமாக என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்ற நோக்கில் டுவிட்டரில் பதிவிடுகின்றனர்" என்கிறார்.

## கொதிக்கும் தி.மு.க!

தொடர்ந்து பேசுகையில், ஹஹ பிரதமரை சம்பிரதாய அடிப்படையில் முத லமைச்சர் சந்தித்துப் பேசியுள்ளார். அதிலும், மாநில உரிமை களை மீட்டெடுக்கும் வகையிலான கோரிக்கை களைப் பற்றித்தான் பிரதமரிடம் பேசியி ருக்கிறார். முந்தைய காலகட்டங்களில் பிரதமர் முன்னி லையில் அடிபணிந்து எடப்பாடி பழனிசாமி அமர்ந்தி ருந்தார். அந்த உடல்மொழியை தமிழ்நாடே கவனித்தது. தற்போதைய அரசு மத்திய, மாநில அரசின் உறவுகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையில் செயல்பட்டு வருகிறது. "இந்தச் சந்திப்பு மகிழ்ச்சியாக இருந் தது" என முதல்வர் கூறுகிறார் என்றால், "நிறைவான சந்திப்பு" என்றுதான் பொருள். இதில் சரணடைய என்ன இருக்கிறது?

மற்றவர்களைப் போல, "எங்களை வந்து ஆட்சி செய்யுங்கள்" என ஆட்சியையா விட்டுக் கொடுத்தோம்? புதுச்சேரியில் ரங்கசாமி விட்டுக் கொடுத்ததைப் போலவா செயல்படுகிறோம். அப்படியெல்லாம் எதுவும் இல்லை. நீட் தேர்வு ரத்து, ஏழு பேர் விடுதலை போன்ற விவ காரங்களை விட்டுக் கொடுக்காமல் பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளோம். தமிழ்நாடு பா.ஜ.கவுக்கு அரசியல் தெரியவில்லை என்றுதான் பார்க்கிறோம். "கொரோனாவை ஒழிக்க விளக்கேற்றினால் போதும்" என்ற மனநிலையிலேயே இருக்கிறார்கள். இவர்களுக்கு இதைத் தாண்டி எந்தக் காலத்திலும் உண் மையான அரசியல் பிடிபடப்போவதில்லை" என்கிறார். "பிரதமர் - முதலமைச்சர் சந்திப்பை பா.ஜ.கவினர் விமர்சிப்பது சரியா?" என மூத்த பத்திரிகையாளர் சிகாம ணியிடம் கேட்டபோது,

"முதலமைச்சராக தேர்வு செய்யப்படுகிறவர், பிரத மரை சந்திப்பது என்பது வழக்கமான ஒன்றுதான். "கொரோனா காலம் என்பதால் உடனே சந்திக்க முடிய வில்லை" எனவும் ஸ்டாலின் கூறியுள்ளார். தமிழ்நாட் டின் அடிப்படையான பிரச்னைகளில் 90 சதவிகிதத்தை ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். இதில் எந்தவித சமரசத் தையும் நான் பார்க்கவில்லை. இதைவைத்து அதிகபட்ச மான விளம்பரத்தை பா.ஜ.க. தேடுகிறது. இது அவர்களின் வழக்கமாகவே இருக்கிறது. இதனை ட்ரோல் செய்வதன் மூலம் அதற்கான பதிலை தி.மு.கவிடம் இருந்து வரவழைக்கப் பார்க்கின்றனர்" என்கிறார்.

## ஸ்டாலின் காட்டிய உறுதி!

தொடர்ந்து பேசிய அவர், "இந்துக்களுக்கு எதிரான வர்களாக தி.மு.கவை முன்னிறுத்தி பா.ஜ.க பிரசாரம் செய்தது. இதற்குப் பதில் சொல்ல வேண்டிய நிலையை உருவாக்குவது எனத் திட்டமிட்டுச் செயல் பட்டு வரு கின்றனர். "மோடியிடம் ஸ்டாலின் சரண்டர் ஆகிவிட் டார்" எனக் கூறினால், அதற்கான எதிர்விளைவை எதிர் பார்ப்பது அவர்களின் நோக்கமாக உள்ளது. இது போன்ற மோதல் அரசியல் என்பது சரியான ஒன்றல்ல. இதனை டுவிட்டரில் ட்ரெண்டாக்குவது, இதுதொடர்பாக யார் மேலாவது நடவடிக்கை எடுக்கப்பட்டால், உடனே கருத்து சுதந்திரம் பறிபோய்விட்டது எனக் கூறுவதை வழக்கமாக வைத்துள்ளனர். இதன்மூலம் பா.ஜ.கவின் செல்வாக்கு அதிகரிக்கப் போவதில்லை.

தற்போதுதான் தி.மு.கவின் ஆட்சிக்காலம் தொடங்கி யுள்ளது. இந்த ஆட்சியை விமர்சிப்பதற்கு இன்னும் காலம் உள்ளது. இதற்கு முந்தைய காலகட்டங்களில் மாறுபட்ட நிலைப்பாட்டின் காரணமாக தி.மு.க ஆட் சியை இழந்துள்ளது. இந்தமுறை பழைய நிலைப்பாட் டின்படி அவர்கள் செயல்படுவதற்கு வாய்ப்பில்லை. 1999-2004 காலகட்டத்தில் நடந்த பா.ஜ.க ஆட்சி, அதன்பிறகு காங்கிரஸ் ஆட்சி எனத் தொடர்ந்து சுமூகமான அணுகுமுறையை தி.மு.க கடைப்பிடித்தது. அதேநேரம், பா.ஜ.க எதிர்ப்பு நிலையை தொடர்ந்து கொண்டு செல்வதுதான் தி.மு.கவுக்கு செல்வாக்கை ஏற்படுத்துவதாக இருக்கும். டெல்லி பயணத்தில் சோனியா, ராகுல்காந்தி ஆகியோரை சந்தித்ததன் மூலம் தன்னுடைய அரசியல் நிலைப்பாட்டில் ஸ்டாலின் உறுதியாக இருப்பதையும் தெரியப்படுத்தியுள்ளார்" என்கிறார். ■

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை - 6
வினாத்தாள் II

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - சரத்பாபு

23. ஒரு குவியலில் 354 மாம்பழங்கள் இருந்தன. அவை 6 சம அளவுடைய சிறிய குவியலாக பிரிக்கப்பட்டன. ஒரு குவியலில் உள்ள பழங்களின் எண்ணிக்கை யாது?

............................................................


24. ஒரு வியாபாரி தான் விற்பதற்கு வைத்திருந்த 460 இனிப்புக்களில் முதல் மூன்று நாளில் முறையே 68, 124, 109 இனிப்புக்களை விற்றார். இப்போது அவரிடம் விற்பதற்கு எஞ்சியுள்ள இனிப்புக்களின் எண்ணிக்கை யாது?

............................................................

25. ஒன்று ரூபா 95 பெறுமதியான புத்தகத்தையும் ஒன்று ரூபாய் 15 பெறுமதியான பேனைகள் இரண்டையும் வாங்குவதற்கு ஒருவரிடம் 100 ரூபாய் மட்டுமே இருந்தது. அவற்றை வாங்க இன்னும் எவ்வளவு ரூபாய் தேவைப்படும்?


............................................................

26. i. கீழே தரப்பட்டுள்ள உருவின் 3/5 பகுதிக்கு நிறந் தீட்டுக.



ii. அருகில் உள்ள உருவின் சுற்றளவைக் காண்க?

............................................................




27. தாருகா 500 ரூபாய் தாள் காசு ஒன்றும் 100 ரூபாய் தாள் காசு இரண்டும் வைத்திருந்தாள். இப்பணம் முழுவதையும் அவள் 20 ரூபாய்த் தாள்காசுகளாக மாற்றினாள். அவளிடம் உள்ள 20 ரூபாய் தாள்காசுகளின் எண்ணிக்கை யாது?

............................................................


28. கொழும்பு கோட்டையிலிருந்து மு.ப 09.30 ற்குப் புறப்பட்ட புகையிரதம் பாணந்துறை என்ற இடத்தை 50 நிமிடங்களில் சென்றடைந்தது. புகையிரதம் பாணந்துறையை அடைந்த நேரத்தை நியம நேரத்தில் குறிப்பிடுக.

............................................................

29. ஒரு பெட்டியினுள் 868 பாக்குகள் இருந்தன. அவற்றை சமமான இரண்டு குவியல்களாகப் பிரித்தால் ஒரு குவியலில் உள்ள பாக்குகளின் எண்ணிக்கை யாது? ..............................

30.

| உணவு வகை | மாணவர் தொகை |
|---|---|
| இட்லி | 35 |
| பிட்டு | 50 |
| வடை | .......... |
| தோசை | 20 |




i. வரைபை அவதானித்து அட்டவணையை நிரப்புக.


ii. அட்டவணையை அவதானித்து வரைபை குறித்து நிழற்றுக.

* 31 தொடக்கம் 60 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

31. சித்திரைப் புத்தாண்டு காலத்தில் பூக்கும் தாவரம்
*1. பலா* *2. வேம்பு* *3. நாவல்* *4. பனிச்சை*

32. இராக்காலத்தில் மரங்களின் மீது பாதுகாப்பாகக் கழிக்கும் பிராணி
*1. ஆட்காட்டி* *2. பாம்பு* *3. வௌவால்* *4. முதலை*

33. புராதன காலத்தில் செய்திகளைக் கொண்டு செல்ல உதவிய பிராணி



1 2 3 4

34. அருகிலுள்ள ஔடதப் பெறுமானமுடைய தாவரம்



*1. வட்டக்கத்தரி* *2. கண்டங்கத்தரி*
*3. சுண்டக்காய்* *4. சிறு நாரத்தை*

35. மனிதனின் குருதியை உறுஞ்சிக் குடிக்கும் போது நோயைப் பரப்பும் பிராணி எது?
*1. கட்டில் மூட்டுப்பூச்சி* *2. நுளம்பு*
*3. தலைப்பேன்* *4. அட்டை*

36. அருகிலுள்ள வரிப்படத்தில் காணப்படும் கிராமிய விளையாட்டு



*1. கல்லுப் பொறுக்குதல்* *2. தாயம் போடுதல்*
*3. கிளித்தட்டு* *4. பசுவும் புலியும்*

37. உடலுக்குந் சக்தியைத் தரும் உணவு, உடல் வளர்ச்சிக்கு உதவும் உணவு
*1. பானும் கறியும்* *2. மீனும் இறைச்சியும்*
*3. அரிசிச் சோறும் மீன் சொதியும்* *4. கருவாடும் மாம்பழமும்*

38. பகலில் பூக்கும் ஐந்து இதழ்களைக் கொண்ட வெண்ணிறமான பூ எது?
*1. தாமரை* *2. நித்தியகல்யாணி* *3. ஆவாரம் பூ* *4. எருக்கலை*

39. இலைக்கஞ்சி தயாரிக்கப் பயன்படுத்தப்படும் இலை வகையாக அமையாதது எது?
*1. முசுட்டை* *2. மொசுமொசுக்கை* *3. முல்லை* *4. கண்டங்கத்தரி*

40. கடைகளில் உணவுப்பொருட்கள் வாங்கும்போது, கலப்படம் செய்யாதிருப்பதைக் கண்டுபிடித்தவுடன் யாருக்கு அறிவிக்க வேண்டும்?
*1. பொலிஸ் அதிகாரி* *2. பொதுச்சேவகப் பரிசோதகர்*
*3. கிராம அதிகாரி* *4. பிரதேச செயலாளர்*

41. எமது முன்னோர் வெயிலில் காய வைத்து பாதுகாத்த உணவுப் பொருட்கள்
*1. பனங்கிழங்கு, பாகற்காய்* *2. இறைச்சி,பப்பாசிப்பழம்*
*3. பனாட்டு, மாம்பழம்* *4. மரவள்ளிச்சீவல், வெண்டிக்காய்*

42. இலங்கை இந்தியாவுக்கு எத்திசையில் அமைந்துள்ளது?
*1. வடக்கு* *2. தெற்கு* *3. மேற்கு* *4. கிழக்கு*

43. உடலை நோயிலிருந்து பாதுகாக்கும் உணவைக் கொண்ட கூட்டம்

| | | | |
|---|---|---|---|
| இறைச்சி | சோறு | பசளிக்கீரை | கருப்பட்டி |
| பாசிப்பயறு | பருப்பு | மாம்பழம் | பசளிக்கீரை |
| சோயாப்பால் | கீரை | கரட் | அப்பிள் |
| பசளிக்கீரை | மாம்பழம் | பலாப்பழம் | தேன் |

ஈழநாடு

# புதிய வாக்காளர் பதிவின் அடிப்படையில் யாழில் பறிபோன ஆசனம் கம்பஹாவுக்கு

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 20

**புதிய வாக்காளர் பதிவின் அடிப்படையில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இருந்து பறிபோன பாராளுமன்ற ஆசனம் கம்பஹா மாவட்டத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.**

திருத்தியமைக்கப்பட்ட 2020ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியலுக்கமைய யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இருந்து தெரிவாகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இதன்படி, யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கான பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 7இல் இருந்து 6ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இருந்து குறைப்பு செய்யப்பட்ட உறுப்புரிமை கம்பஹா தேர்தல் மாவட்டத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதையடுத்து கம்பஹா தேர்தல் மாவட்டத்தில் இருந்து தெரிவாகின்ற பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை 18இல் இருந்து 19ஆக அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கியதாக நடைமுறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ். வலிகாமம் வடக்கு பகுதியில் கடந்த 1990ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக இடம்பெயர்ந்த பெருந்தொகையான மக்கள் இன்னும் முழுமையாக மீள்குடியேறாத நிலையில் அப்பிரதேசத்துக்கான வாக்காளர் இடாப்பு புதுப்பிக் கப்படாமல் இருந்து வந்தது.

இந்நிலையில், 2020ஆம் ஆண்டு வாக்காளர் பதிவில் உள்வாங்கப்பட்டவர்களது விபரங்களின் அடிப்படையில் திருத்தப்பட்ட வாக்காளர் பதிவு இறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் வலிகாமம் வடக்கு பிரதேசத்துக்குட்பட்ட சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெயர்கள் நீக்கப்பட்டிருந்தன.

இதனடிப்படையிலேயே யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கு ஒரு பாராளுமன்ற ஆசனம் பறிபோயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து மேலும் 42 பேருக்கு எதிராகக் குற்றப்பத்திரம்

கொழும்பு, ஜூன் 20

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள 42 சந்தேக நபர்கள் மீது ஜூலை மூன்றாம் வாரத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்வதற்கு சட்டமா அதிபர் தயாராகி வருகின்றார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய சம்பவங்கள் தொடர்பாக ஏற்கனவே 32 பேர் மீது குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மாவனெல்லை புத்தர் சிலைகள் உடைப்பு விவகாரம், லெக்டோஸ் தோட்ட பகுதியில் வெடிக்கும் கருவி கண்டு பிடிக்கப்பட்டமை உள்ளிட்ட 8 வழக்குகளுடன் தொடர்புடைய 32 பேர் மீது இவ்வாறு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே, ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகள் குறித்து அரசைக் குறை கூற மக்களுக்கு எந்தக் காரணமும் இல்லை எனவும் அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர மேலும் கூறினார். (இ)

# ‘டெல்டா’ வைரஸ் திரிபு பரவலை தடுக்க சுகாதார அமைச்சு விசேட நடவடிக்கை!

கொழும்பு, ஜூன் 20

இந்தியாவில் வேகமாகப் பரவி வரும் ‘டெல்டா’ வைரஸ் திரிபினால் பாதிக்கப்பட்ட ஐவர் தெமட்டகொட பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், குறித்த பிரதேசத்திலிருந்து வைரஸ் வேறு இடங்களுக்குப் பரவுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அதிகாரிகளுக்கு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பணிப்புரை விடுத்துள்ளார்.



கொரோனா பரவல் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் இந்தப் புதிய திரிபு வைரஸ் பரவலால் ஏற்படும் பிரச்சினை தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதற்கமைய, குறித்த திரிபு அடையாளம் காணப்பட்ட பிரதேசத்தை தனிமைப்படுத்தி அப்பகுதியில் வசிப்பவர்களிடமிருந்து பி.சி.ஆர். மாதிரிகளைப் பெற்று பரிசோதனைகளை முன்னெடுக்கவுள்ளதாக இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணிய நபர்களைக் கண்டறிந்து பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுப்பதற்கும், அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் இந்த டெல்டா திரிபு பரவியுள்ளதா எனக் கண்டறிய விசேட விசாரணைகளை முன்னெடுக்கவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிசோதனைக்குத் தேவையான அனைத்து பௌதீக மற்றும் மனித வளங்களையும் வழங்கத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.(இ)



# வெதுப்பக உற்பத்தி பொருட்களை விற்போருக்கு பாதுகாப்பு அங்கிகள்

## யாழ்.நகரில் பொலிஸார் வழங்கினர்

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்.நகரில் வெதுப் பக உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் பிரதிநிதிகளுக்குக் கொரோனா பாதுகாப்பு அங்கிகள் யாழ். பொலிஸாரால் நேற்று வழங்கி வைக்கப்பட்டுளளன.

ஓட்டோ உள்ளிட்ட வாகனங்களில் வெதுப்பக உற்பத்திப் பொருட்களை நடமாடி விற்பனை செய்து வருவோருக்கே பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் பொருட்டு இனிவரும் காலங்களில் இந்தப் பாதுகாப்பு அங்கிகளை அணிந்தே விற்பனையில் ஈடுபட வேண்டும் என்று யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (இ-3)

# கோழி இறைச்சியின் விலையும் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 20

கோழி உற்பத்தி செலவுகள் அதிகரித்து வருவதால் கோழி இறைச்சியை அதன் நிர்ணய விலைக்கு விற்பனை செய்ய முடியாது என்று கோழி உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மக்காச் சோளம் இறக்குமதியை தடை செய்தல், பெரிய அளவிலான இறக்குமதியாளர்களின் கோதுமை விதை இறக்குமதியைக் கட்டுப்படுத்தல் போன்ற பிரச்சினைகள் காரணமாக விலங்குகளின் தீவன விலை உயர்ந்துள்ளது.

ஒரு கிலோ மக்காச் சோளத்தின் விலை 55 ரூபாவிலிருந்து 90 ரூபாவாக அதிகரித்துள்ளது எனவும் கோழி உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கோழி உற்பத்தியில் 70 சதவீத செலவீனம் விலங்கு தீவனத்துக்காகச் செலவிடப்படுகின்றது எனவும் அவர்கள் கூறியுள்ளனர். (இ)

# கொரோனா வைரஸ் தொற்று ஆபத்து இடங்கள் அடையாளம்

கொழும்பு, ஜூன் 20

நாட்டில் கடந்த 14 நாட்களுக்குள் அதிகளவிலான கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் பதிவாகிய இடங்களை அதிக ஆபத்துள்ள பகுதிகளாகத் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளில் அதிகளவில் பதிவாகிய நோயாளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் வரைபடம் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி முசலி, பலுகஸ்வேவ, சேருவில, செங்கலடி, காரைதீவு தெற்கு மற்றும் லொஹுகல போன்ற சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகள் அதிக ஆபத்துள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேலும், மாந்தை கிழக்கு வெலிஓயா போன்ற பகுதிகளில் அதிகளவிலான கொரோனாத் தொற்று நோயாளிகள் பதிவாகியுள்ளனர் என்று தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.(இ)

# இலங்கை விடயத்தில் இனியும் தலையிடாவிட்டால் 13ஆவது திருத்தச் சட்டமும் காணாமல் போய்விடும்

## இந்தியாவுக்கு சிவாஜிலிங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 20

இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இலங்கை விவகாரத்தில் இனியும் தலையிடவில்லை என்றால் அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டமும் இல்லாது போய்விடும் என்று முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இந்தியாவிடம் ஒன்றையே கேட்க விரும்புகின்றோம். தற்போது இருக்கின்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்காவிடின் உங்களால் இனி எதனையும் செய்ய முடியாமல் போகும்.

இலங்கை தீவுக்குள்ளே பூகோள நலன்சார்ந்த பிரச்னையில் இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் சேர்ந்த அமைப்பாக இருக்கலாம் அல்லது ஐரோப்பியா உள்ளிட்ட ஏதாவது ஓர் அமைப்பு வடக்கு, கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும்.

குறித்த வாக்கெடுப்பை நடத்துவதன் ஊடாகவே எங்களுடைய மக்களின் தலைவிதியை அவர்களே தீர்மானிக்க கூடிய வாய்ப்பு ஏற்படும். அது தான் நிரந்தர அரசியல் தீர்வாக இருக்கும்.

ஆகவே, இந்த விடயத்தில் இறுக்கமான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும்” - என்றார். (இ-3)

ஈழநாடு






# காங்கிரஸ் கூட்டணியிலிருந்து விலகி ஸ்டாலின் பா.ஜ.கவில் இணைவாரா?

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின், பிரதமர் நரேந் திர மோடியுடனான தனது சந்திப்புக்காக கடந்த வியாழக்கிழமை புதுடில்லி புறப்பட்டபோது, ஏப்ரல் 6ஆம் திகதி நடைபெற்றுமுடிந்த மாநில தேர்த லில் பரம வைரிகளாக மோதிக் கொண்ட இருவரினதும் சந்திப்பு பெரிய பயன் எதனையும் தந்து விடாது என்றே பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) அல்லாத மாநில முதல்வர் ஒருவர் பிரதமரைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவிப்பதும், காமெராக்களுக்கு செயற்கைச் சிரிப்பு சிரிப்பதும், பின்னர் வெளியே வந்து பத்திரிகைக்காரர் களிடம் வழக்கமான விதத்தில் ‘பார்க்கலாம்’ என்ற வார்த்தையைவிட வேறொன்றும் பிரதமரிடமிருந்து வரவில்லை என்று கூறுவதுமான வழக்கமான சடங்கு தான் நிகழுமென்றே பலரும் நம்பினார்கள். ஆனால், பிரதமரின் வாசஸ்தலத்தில் அந்த 25 நிமிடநேர சந்திப்பில் வெளிவந்தது, அழகான அந்த சென்னை பட்டுச் சால்வையுடன் மோடியின் மகிழ்ச்சித் தோற்றம் மாத்திரமல்ல, அது, அதற்கும் மேலானது.



- பகவான் சிங் - தமிழகத்தின் சிரேஷ்ட பத்திரிகையாளர்

‘மாண்புமிகு பிரதமருடனான சந்திப்பு ஒரு மகிழ்ச்சியான சந்திப்பாக, இன்னும் சொல்லப்போனால் மன நிறைவு தரக்கூடிய ஒரு சந்திப்பாக இருந்தது என்பதை நான் உங்க ளுக்கு தெரிவிக்க விரும்பு கிறேன்’ என்று, சந்திப் பின் பின்னர் செய்தியாள ரிடம் ஸ்டாலின் கூறிய போது, முகக் கவசத்துக் குள்ளாக, ஸ்டாலினின் முகத்தில் ஒரு மகிழ்ச்சிப் புன்னகை பூத்தது.

‘நான் சென்றவுடன், தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்றிருக்கும் எனக்கு அவர் முதலில் வாழ்த்துக் கூறினார். அந்த வாழ்த்தைப்பெற்று, நான் அவருக்கு என்னுடைய நன்றியைச் சொல்லியிருக்கிறேன்’ என்று, பிரதமர் இல்லத்து வரவேற்பைப்பற்றி ஸ்டாலின் சொன்னார்.

‘நான் பிரதமரிடம் கையளித்த முறைப்பாடுகளில் சில மத்திய அரசால் மட்டுமே தீர்க்கப்படவேண்டியவை. மற்றையவை சில மத்திய அரசின் அங்கீகாரத்தின் பின் னர் மாநில அரசால் கையாளப்படக்கூடியவை. ஏனை யவை, மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து மேற் கொள்ளப்படவேண்டியவை. எனவே, ஒன்றிய அரசும் தமிழ்நாடு அரசும் இணைந்து இந்தக் கோரிக்கைகளைப் படிப்படியாக நிறைவேற்றவேண்டும் நிறைவேற்ற முடி யும் என்ற நம்பிக்கையை எனது இந்த டில்லி பயணம் எனக்கு கொடுத்திருக்கிறது என்று நம்புகிறேன்’ என்று, ஸ்டாலின் திடமான நம்பிக்கையுடன் கூறினார்.

தமிழ் நாட்டின் தேவைகளை நிறைவு செய்ய தனது அரசாங்கம் மத்திய அரசை தொடர்ந்து வற்புறுத்தும் என்றும் தெரிவித்த ஸ்டாலின், எதற்காகவும் எந்நேரமும் தன்னை தொடர்புகொள்ளலாம் என்று பிரதமர் கூறிய தாகவும் சொன்னார்.

‘மோடி இல்லத்து உபசாரம், பாஜக, மற்றும் மோடி தொடர்பிலான திமுகவின் எதிர்ப்புணர்வில் தளர்வை ஏற்படுத்தக்கூடுமா?’ என்று நிருபர் ஒருவர் கேட்டதற்கு, ‘உறவுக்கு கைகொடுப்போம் உரிமைக்கு குரல் கொடுப் போம் என்ற முத்தமிழறிஞர் கலைஞரின் நிலைப்பாடே தமிழக அரசின் நிலைப்பாடு’ என்று, உடனே பதில் சொன்னார் ஸ்டாலின்.

முன்னைய தமிழக முதல்வர்கள் எடப்பாடி பழனிசாமி யும் ஓ. பன்னீர்செல்வமும் மோடி முன்னிலையில் பயந்து வணங்கும் காட்சியாக அல்லாமல், தமிழகத்தின் பெரு மையை மீட்ட காட்சியாக ஸ்டாலினை பார்த்த பாராட் டுக்களும் ஸ்டாலினுக்கு குவிந்தன. இந்த அதிசய மாற்றத்தை வெளிப்படுத்தி, மோடியுடன் எடப்பாடியும், ஸ்டாலினுமாக இணைக்கப்பட்ட இருவேறு புகைப் படங்கள், சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவின.

ஸ்டாலினின் விருப்புப் பட்டியல் நிறைவேறுமா, எவ்வளவு விரைவில் நிறைவேறும் என்பதையெல்லாம் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ஆனாலும், டெல்லியைக் கையாள்வதில், ஐந்து தடவைகள் முதலமைச்சராகவிருந்த தனது தந்தையாரைவிடவும்கூட ஸ்டாலின் சமர்த்தர்போலவே வரவேற்புப் பெறுகிறார்.

இவ்வேளையில், தங்கள் நண்பர் எடப்பாடி பழனிசாமி, சின்னம்மாவின் சவால்களை எதிர்த்த சண்டையில் மூழ்கிப்போயிருக்கையில், பாஜக தலைவர்களும் ஸ்டாலினுடன் ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்த எண்ணுவார்கள். எடப்பாடி பழனிசாமி, தனக்கு ஆதரவான அஇஅதிமுக மாவட்ட செயலாளர்கள் மூலம், சசிகலா கட்சியிலிருந்து எப்போதோ வெளியேற்றப்பட்டுவிட்டார் என்றும் கட்சியில் இனி அவருக்கு இடமில்லை என்றும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார். இந்நிலையில், ஸ்டாலினின் விருப்புப் பட்டியலை சாதகமாக அணுகுவது, தமிழ் நாட்டின் அபிவிருத்தியிலும் மக்கள் நலனிலுமான அக்கறையை வெளிப்படுத்தும் ஒரு விவேக மான அரசியல் நடவடிக்கையாக பா.ஜ.கவின் மத்திய அரசு கருதலாம். இது, காவிக் கட்சிக்கும் அதன் தலை மைக்கும் மாநிலத்தில் குறிப்பாக, திராவிட மக்கள் மத்தி யில் நிலவும் நீண்டகால விரோதப்போக்கைத் அழிப்ப தில் உதவலாம். இதில், ஒரு வெளிப்படையான அரசியல் பிரதியுபகாரமும் உண்டு.

மோடியைப் பொறுத்தவரை, பா.ஜ.க. அல்லாத மாநில முதல்வர்களின் கூட்டணி ஒன்றை உருவாக்குவதற்கான எந்தவொரு முயற்சியையும் தடம்புரட்டுவது முக்கியம். ஸ்டாலினைப் பொறுத்தவரை, இந்த ஐந்தாண்டு காலத் தில் சுமுகமாக பயணித்து, அடுத்த தேர்தலின் வெற்றி யையும் உறுதிசெய்வது முக்கியம். அதன்மூலம், புதல்வர் உதயநிதி பொறுப்பேற்பதற்கு வாய்ப்பாக, திமுகவை ஒருங்கிணைத்துக்கொள்ளலாம். ‘உங்கள் கோரிக்கைளை பிரதமர் மோடி நிறைவுசெய்வார் என்பதில் நீங்கள் எப்படி நம்பிக்கைகொள்கிறிர்கள்?’ என்று, டில்லியில் நிருபர்கள் கேட்டதற்கு, ‘நாங்கள், விரிவாக கொடுத்தது மட்டுமல்ல, காரண காரியங்களைச் சொல்லியிருக் கிறோம். சம்பந்தப்பட்ட அமைச்சர்களோடு - அதிகா ரிகளோடு கலந்துபேசி, நிச்சயமாக நல்ல முடிவு எடுப் பேன் நம்பிக்கையோடு இருங்கள் என்று பிரதமர் உறுதி கொடுத்திருக்கிறார். அந்த நம்பிக்யில் நாங்கள் இருக் கிறோம்’ என்று ஸ்டாலின் கூறினார். கூடுதல் கோவிட் தடுப்பூசிகள், கூடுதல் நிதி, மருத்துவ கல்லூரி அனு மதிக்கான ‘நீட்’ ஒழிப்பு, முக்கிய சில கட்டுமான பணி கள் என்று, சில முக்கிய விவகாரங்களில் டில்லி உதவிய ளிக்கத் தொடங்கினால், மோடிமீதான நம்பிக்கை, காங்கிரசுடனான எதிர்கால சமன்பாடுகளில் ஸ்டாலி னிடத்தில் மாற்றங்களையும் ஏற்படுத்தலாம்.

## ‘உறவுக்கு கை கொடுப்போம், உரிமைக்கு குரல் கொடுப்போம்’

ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் மம்தா பனர்ஜியை பிரதமராக்கும் முய்ற்சி, மத்தியில் பா.ஜ.க. ஆட்சியாளர் களைத் தூண்டி, அது தனது ஸ்திரத்தன்மைக்கும் தமிழ் நாட்டின் நலன்களுக்கும் அச்சுறுத்தலாகுமானால், அதில் ஸ்டாலின் முயல்வதற்கு அவர் அரசியலுக்கு புதிய வராக இருக்கவேண்டும். அத் துடன், ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக ஸ்டாலினே முன்மொழிந்த ராகுல் காந்தி, தனது கட்சியையே ஒன்றிணைக்க முடியாமல், செயலற்ற நிலையில் இருக்கிறார்.




மேலும், தமிழ் நாட்டில் பா.ஜ.கவுடன் போராட ஸ்டாலினுக்கு ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் ஆதரவு தேவையில்லை. ஏனெனில், தமிழ் நாட்டில் காவிக் கட்சியால் பெரும் அச்சுறுத்தல் எதுவும் திமுகவுக்கு குறிப்பிடத்தக்க அளவில் இல்லை. ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் சற்று கணக்கில் கொள்ளவேண்டிய ஒரே கட்சி காங்கிரஸ்தான். ஆனால் அதுவும், ஏதோவொரு திராவிட கட்சியின் முதுகில் ஏறித்தான் சவாரிசெய்யவேண்டும்.

ஆக, தனது அரசாங்கத்தின் சுமுகமான பயணத்தை யும், தமிழ் நாட்டின் அபிவிருத்திக்கு மத்திய அரசின் கூடுதல் ஆதரவையும் உறுதிப்படுத்த, ஸ்டாலின் ஒரு கட்டத்தில், ஐக்கிய கூட்டு முன்ன ணியிலிருந்து விலகி, பா.ஜ.கவுடன் தன்னை இணைத்துக்கொள்வாரா? பல அரசி யல் அவதானிகள் இதனை மறுக் கிறார்கள். பா. ஜ.கவுக்கு தமிழ்நாட் டில் தி.மு.கதான் வேண்டும் என் கிறார்கள் அவர்கள். ஏனெனில், 2024 பாராளுமன்ற தேர்தலில் கூட்டணி ஒன்றை பா.ஜ.க. எண்ணுகிறது. தற் போதைய கூட்டுக் கட்சியான அ.இ.அ.தி.மு.க. நாளுக்குநாள் செல்வாக்கை இழந்து வரும் நிலையில், ஸ்டாலினை இழுக்க பா.ஜ.க. முயல லாம். ஆனால், ஸ்டாலின் தூண்டிலில் அகப்படுவது சந்தேகமே என்கிறார்கள்.

காங்கிரசுடனான திமுகவின் உறவு சிலவேளைகளில் தளரலாம். ஆனால், பா.ஜ.கவுடன் இணைந்து கொள்ள மாட்டாது என்கிறார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி யின் பொதுச் செயலாளர் டி. ரவிக்குமார். ஏனெனில், தமிழ் நாட்டில் பாஜக எதிாப்பு மிக பலமானது. ஸ்டாலின் அடுத்த தேர்தலையும் (2016) வெல்லவேண்டும். பா.ஜ.க வுடன் இணைந்தால் அது சாத்தியமில்லை என்கிறார் அவர்.

மேலும், ஸ்டாலின் ஒரு வலுவான திராவிட சித்தாந்த நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார். முன்னர்போல, டில்லியை ‘மத்திய அரசு’ என்றில்லாமல், ‘ஒன்றிய அரசு’ என்று அழைக்கவேண்டும் என்றும், தமிழ், ஒன்றிய அர சின் உத்தியோக மொழியாகவேண்டும் என்றும், தமிழ் நாட்டின் ஒன்றிய அரசு திணைக்களங்களில் தமிழர்க ளுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும் என்றும் ஸ்டாலின் வற்புறுத்துகிறார். பா.ஜ.கவுடன் இணைந்து இதில் சமரசம் தேடும் தேவை ஸ்டாலினுக்கு இல்லை என்கிறார் ரவிக்குமார்.

கையளிக்கப்பபட்ட விருப்பு பட்டியலை மோடி எப்படி கையாள்கிறார் என்பதில்தான் தமிழ் நாட்டின் எதிர்கால அரசியல் நீரோட்டம் பெரும்பாலும் தங்கி யிருக்கிறது. அத்துடன், ஐக்கிய முற்போக்கு கூட்டணி யிலும், அதன் தலைவி மம்தா பனர்ஜியின் ஆதிக்கத்தி லும் ஸ்டாலின் தன்னை எப்படி ஈடுபடுத்த அல்லது விலக்கிக்கொள்ளப்போகிறார் என்பதிலும் தங்கியிருக் கிறது. காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோர்மீது இப்போது ஸ்டாலினுக்கு மரி யாதையுண்டு. டில்லியில் அவர்களையும் சென்று பார்த் தார். ஆனால், மனைவி துர்க்காவையும் அவர் அழைத் துச்சென்றதில், அரசியல் முக்கியத்துவத்தைவிட, ஒரு குடும்ப விவகாரமாகவே இது தோற்றம்பெற்றது. ■




# சீனாவுக்கு எதிராக ஜி - 7 நாடுகள் வகுக்கும் உபாயம் வெற்றிபெறுமா?

**தாக்‌ஷாயிணி**

கொரோனா வைரஸ் உலக நாடுகளைக் கபளீகரம் செய்துவரும் நிலையில், ஜி-7 கூட்டமைப்பு நாடுகளின் கூட்டம் ஜூன் 11 முதல் 13ஆம் திகதி வரை பிரிட்டனில் நடைபெற்றது. கொரோனா வைரஸ் தோற்றம் குறித்து ஆராய்வதற்கும், சீனாவுக்கு எதிராகச் சில நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் ஜி-7 நாடுகளின் தலைவர்கள் முடிவெடுத்திருப்பதாக வெளியாகியிருக்கும் தகவல்கள்தான், இந்தக் கூட்டத்தைப் பற்றிய பரபரப்பை எகிறவைத்திருக்கிறது.

ஜூன் 16அம் திகதி நிலவரப்படி, உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 38.49 லட்சமாக உயர்ந்திருக்கிறது. உலக நாடுகளின் பொருளாதாரமே பந்தாடப்பட்டிருக்கிறது. உலக பொருளாதார, சமூக, அரசியல் சூழல்களையே புரட்டிப்போட்ட கொரோனா வைரஸ், சீனாவின் வூஹான் வைரஸ் ஆராய்ச்சி மையத்திலிருந்து வெளியேறியதாகவும், இதைக் கட்டுப்படுத்த சீன அரசு தவறிவிட்டதாகவும் அமெரிக்காவின் சி.ஐ.ஏ., எஃப்.பி.ஐ. போன்ற அமைப்புகள் கண்டறிந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

எம்மி விருதுபெற்ற மூத்த பத்திரிகையாளர் ஆதம் ஹவுஸ்லீ தனது ட்விட்டர் பதிவில், “சமீபத்தில், சீனாவின் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் சிலரை, எஃப்.பி.ஐ. அமைப்பினர் தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்திருக்கிறார்கள். அவர்கள் மூலமாக ஏராளமான ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. சீனா தெரிந்தே கொரோனா வைரஸைப் பரப்பியதாக இந்திய உளவுத் துறையும் அமெரிக்காவுக்குத் தகவல் சொல்லியிருக்கிறது. இவையெல்லாம் சீனாவுக்குக் கடும் நெருக்கடியைத் தரப்போகின்றன” என்று பதிவிட்டிருக்கிறார்.

இதற்கிடையே, அமெரிக்க அதிபருக்கு அந்த நாட்டின் உளவு அமைப்புகள் அளித்திருக்கும் அறிக்கை ஒன்று பெரிதாகப் பேசப்படுகிறது. அந்த அறிக்கையின் சாராம்சம் இதுதான்... “2012, ஏப்ரல் மாதம் சீனாவின் யுனான் மாகாணத்திலுள்ள மொஜியாங் காப்பர் சுரங்கத்தில், வௌவால்களின் கழிவு களை அகற்றும் பணியில் சுரங்கத் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர். அவர்களில் ஆறு பேருக்கு திடீரென மர்மக் காய்ச்சல், மூச்சுத்திணறல் ஏற் பட்டதில் மூன்று பேர் இறந்துவிட்டனர். இதையடுத்து 2012, ஜூலை மாதம் அவசர அவசரமாக மொஜியாங் சுற்றுப்புறப் பகுதிகளில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை சீன அரசு மேற்கொண்டது.

2013, ஏப்ரலில் யுனானில் தாய்லாந்து சுற்றுலாவாசி ஒருவர் மர்மக் காய்ச்சலால் இறந்துபோனார். சுரங்கத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட அதே உடல் பாதிப்பு அந்த சுற்றுலாவாசிக்கும் ஏற்பட்டது. சீனாவைத் தாக்கும் நோய்ப் பரவல், அதனால் ஏற்படும் உயிரிழப்புகளை ஒவ்வொரு வருடமும் ஆவணமாக வெளியிடும் சீன அரசு, இந்த இரு சம்பவங்களைப் பற்றி எங்கும் குறிப்பிடவில்லை.




மொஜியாங் காப்பர் சுரங்கத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வைரஸுக்கு `RaTG13’ என்று பெயரிட்ட சீன அரசு, அந்த வைரஸ் பற்றிய ரகசிய ஆய்வுகளை மேற்கொள்ள ஆரம்பித்தது.

குன்மிங் மருத்துவப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மருத்துவர் லீ சூ என்பவர், ‘சார்ஸ் நோய் போன்றதொரு வைரஸ் தொற்றால்தான், மொஜியாங் சுரங்கத் தொழிலாளர்கள் இறந்து போனார்கள்’ என்று 2013 இறுதியில் ஆய்வறிக்கையைத் தாக்கல் செய்தார். RaTG13 வைரஸ் ஆய்வுகளை சீனா வேகப்படுத்தியதால், வௌவால் முதல் பன்றிகள் வரை பல்வேறு விலங்குகளிடமிருந்து சுமார் ஒரு லட்சம் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆராய்ச்சிகள் நடைபெற்றன. இதில், 181 மாதிரிகளில் ‘சார்ஸ்’ வைரஸின் திரிபு இருப்பது கண்டறியப்பட்டு, அவை வூஹான் வைரஸ் ஆராய்ச்சி மையத்தில் மேல் ஆராய்ச்சி செய்யப்பட்டது. இந்த மையம்தான் பின்னாளில் உலக நாடுகளுக்கே வேட்டுவைக்குமென அப்போது யாரும் நினைத்துப் பார்க்கவில்லை.

வூஹான் ஆராய்ச்சி மையத்தில், RaTG13 வைரஸ் மரபணுக்களைக் கொண்டு பயோ ஆயுதங்கள் உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகளை சீன மருத்துவர்கள் ஆராய்ச்சி செய்துவந்தனர். 2013 முதல் 2019 வரை ஆறு வருடங்களாக நடைபெற்ற இந்த ஆராய்ச்சியில் 2019, ஆகஸ்ட் மாதம் சிக்கல் எழுந்தது. வூஹான் மையத்தில் பணிபுரிந்த நான்கு பேர் திடீர்க் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, மருத்துவமனையில் இறந்து போனார்கள். தொடர்ந்து செப்ரெம்பர், நவம்பர் மாதங்களில் வூஹானில் திடீர்க் காய்ச்சலால் மருத்துவமனையில் சேரும் நோயாளிகளின் எண்ணிக்கை வெகுவாக உயர்ந்திருக்கிறது. இந்த வைரஸுக்கு SARS COV-2 என்று பெயரிட்டனர். அந்தச் சமயத்தில், கொரோனா வைரஸ் தொற்றைக் கண்டறியப் பயன்படும் 40,500 பி.சி.ஆர் கிட்டுகளுக்கு, வூஹான் நகர நிர்வாகம் ஆர்டர் கொடுத்திருக்கிறது. டிசம்பர் முதல் வாரத்தில் சமூக விலகலைக் கடைப்பிடிக்கும்படியும், மாஸ்க் அணியும்படியும் சீன அரசு வூஹான் மக்களை அறிவுறுத்தியிருக்கிறது. மேலும், அவசர அவசரமாக புது உயிரி பாதுகாப்பு, தடுப்பூசிக் கொள்கைச் சட்டங்களையும் சீனா நிறைவேற்றியது.

> **சீனாவைக் கூண்டில் ஏற்றுவதற்கான வலுவான ஆதாரங்கள் இன்னும் திரட்டப் படவில்லை என்று தெரிகிறது. அதனாலேயே ‘சீனாவுக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைய வேண்டும்’ என்று மட்டும் அழைப்பு விடுத்திருக்கிறார் அமெரிக்க அதிபர் ஜோ பைடன்.**

உலக சுகாதார அமைப்பு 2005ஆம் ஆண்டு கொண்டுவந்த ‘சர்வதேச சுகாதார ஒழுங்குமுறை’ விதிகளில் சீனா கையெழுத்திட்டிருக்கிறது. ஒழுங்குமுறை விதி 6இன் படி, ஒரு நாட்டில் அடையாளம் தெரியாத மர்ம நோய் பரவினாலோ, வைரஸின் தாக்கம் கண்டறியப்பட்டாலோ, 48 மணி நேரத்துக்குள் அது குறித்து விசாரணை செய்து, அடுத்த 24 மணி நேரத்துக்குள் உலக சுகாதார அமைப்புக்கு அந்த நாடு அறிக்கை அளிக்க வேண்டும். ஆனால், ஆகஸ்ட் 2019இல் கண்டறியப்பட்டு, செப்ரெம்பர் மற்றும் நவம்பர் மாதங்களில் உச்சம் தொட்ட ஒரு வைரஸ் பாதிப்பை, டிசம்பர் 31ஆம் தேதிதான் உலக சுகாதார அமைப்புக்கு சீனா தெரியப்படுத்தியது. இது சட்டப்படிக் குற்றம். இடைப்பட்ட காலத்தில், எவ்வளவோ பேர் வூஹானிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்களை எந்த நாடும் பரிசோதிக்காததால், அந்தந்த நாடுகளில் நோய் பரவியிருக்கலாம். உலக சுகாதார அமைப்புக்குத் தகவல் தெரிவித்த பிறகுகூட, வூஹானிலிருந்து சர்வதேச விமானப் போக்குவரத்துக்கு சீனா தடை செய்யவில்லை. தெரிந்தே மற்ற நாடுகளுக்கும் வைரஸ் பரவட்டும் என்று சீன அரசு முடிவெடுத்ததைத் தான் இந்த நடவடிக்கைகள் காட்டுகின்றன” என்று பகீர் தகவல்களுடன் நீள்கிறது அந்த அறிக்கை!

சீனாவின் ஷாங்காய் பொது சுகாதார மையத்தின் பேராசிரியரான ஜாங் யாங் சென் என்பவர், கொரோனா வைரஸின் மரபணு பற்றிய தகவல்களைக் கடந்த ஜனவரி 11ஆம் திகதி இணையத்தில் பதிவேற்றம் செய்தார். இந்த கொரோனா வைரஸின் மரபணுவும், RaTG13 வைரஸின் மரபணுவும் 96 சதவிகிதம் ஒத்துப் போயிருப்பதைச் சில ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து அதிர்ச்சி அளித்தனர். இதையடுத்து, வூஹான் ஆராய்ச்சி மையத்தில் ஆராய்ச்சி செய்யப்பட்ட RaTG13 வைரஸ்தான் கொரோனா வைரஸாக உருமாறிப் பரவுகிறது என்ற குற்றச்சாட்டு சமூக ஊடகங்களில் பரவியது. சுதாரித்துக்கொண்ட சீன அரசு, ‘இந்த வைரஸ் வௌவாலிலிருந்து பரவியதாகத்தான் எங்கள் விசாரணையில் தெரியவருகிறது. தவிர, அமெரிக்கா குற்றம்சாட்டுவதுபோல, 2019, ஆகஸ்ட் மாதம் வூஹான் மையத்தில் பணிபுரிந்த யாரும் நோய்த் தாக்குதலுக்குப் பலியாகவில்லை’ என்று விளக்கம் அளித்திருக்கிறது.

இந்த விவகாரங்கள் பலவும் ஜி-7 மாநாட்டில் பேசப்பட்டிருக்கின்றன என்கிறார்கள் சர்வதேச அரசியல் பார்வையாளர்கள். ஆனாலும், சீனாவைக் கூண்டில் ஏற்றுவதற்கான வலுவான ஆதாரங்கள் இன்னும் திரட்டப்படவில்லை என்று தெரிகிறது. அதனாலேயே ‘சீனாவுக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைய வேண்டும்’ என்று மட்டும் அழைப்பு விடுத்திருக்கிறார் அமெரிக்க அதிபர் ஜோ பைடன். ஜி-7 நாடுகள் கூட்டமைப்பு வெளியிட்டிருக்கும் கூட்டறிக்கையில், சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தில் உய்குர் முஸ்லிம்கள் மீது நிகழும் மனித உரிமை மீறல்களைக் கண்டித்தும், கொரோனாவின் தொடக்கம் குறித்து விரிவான விசாரணை நடத்த சீனாவை ஒத்துழைக்கக் கோரியும் குரல் எழுப்பப்பட்டிருக்கிறது.

சீனாவின் ‘பட்டுப் பாதை’ திட்டத்துக்கு எதிராக அமெரிக்கா தலைமையிலான புதிதாக மிகப்பெரிய கட்டுமானத் திட்டத்துக்கும் ஜி-7 நாடுகள் தயாராகின்றன. இந்த சர்வதேச அரசியல் ஆட்டத்தில், கொரோனா பரவல் பற்றிய உண்மைகள் வெளிவருமா?

நன்றி : விகடன்

# நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் அரசை வீழ்த்துவது நியாயமற்ற செயல்

## அமைச்சர் சமல் ராஜபக்ஷ கூறுகின்றார்



**கொழும்பு, ஜூன் 20**

**“நாடு நெருக்கடியான காலத்தில் இருக்கும்போது அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதன் மூலமாகவோ அல்லது அமைச்சர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதன் மூலமாகவோ நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. மக்களின் பிரச்சினைகளை விடவும் அரசைக் கவிழ்க்கவே எதிர்க்கட்சி முயற்சிக்கின்றது.”**

- இவ்வாறு அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“கொரோனா வைரஸ் தொற்றை அடுத்து நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன. இவை அனைத்துமே நாம் திட்டமிட்டு செய்யும் செயற்பாடுகள் அல்ல.

உலகத் தில் சகல நாடுகளும் இந்த நெருக்கடி நிலைமைக்கு முகங் கொடுக்க நேர்ந்துள்ளது.

வலுவான பொருளாதாரத்தை கொண்ட நாடுகளும் கூட பாரிய அளவில் வீழ்ச்சி கண்டுள்ளன. ஆகவே, இதற்கு அரசாக நாம் பொறுப்புக்கூற முடியாது.

எரிபொருள் விலை அதிகரிப்பு குறித்து அமைச்சர் உதய கம்மன்பில தனது பக்க நியாயத்தை முன்வைத்துள்ளார். ஜனாதிபதி, பிரதமர், மத்திய வங்கி, வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உப குழு ஆகிய சகலவற்றிலும் ஆராய்ந்தே எரிபொருள் விலை அதிகரிப்பு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு இருக்கையில் ஒருவர் மீது குற்றம் சுமத்தி அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவது நியாயமானதாக நாம் கருதவில்லை.

நாட்டில் இருக்கும் பிரச்சினைகளுக்கு எல்லாம் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்து அரசை வீழ்த்துவது என்றால் அது நியாயமற்ற செயற்பாடு என்றே நான் கருதுகின்றேன்” - என்றார். (இ)

# ‘டெல்டா’ மிக வேகமாக பரவக்கூடிய சாத்தியம்

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

*கொழும்பு, ஜூன் 20*

‘டெல்டா’ வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ள தெமட்டகொடை 69 ஆவது தோட்டத்தில் இருந்து வேறு பகுதிகளுக்கு பி.1.617.2 வைரஸ் வேகமாகப் பரவக்கூடிய சாத்தியம் உள்ளது. குறித்த பகுதிகளில் துரிதமாக பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுத்து வைரஸ் பரவல் உள்ளதா எனக் கண்டறிய வேண்டும்.

- இவ்வாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவர் வைத்தியர் உபுல் ரோஹண தெரிவித்தார்.




அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“தெமட்டகொடை 69ஆவது தோட்டத்தில் வசிக்கும் மக்கள் வெவ்வேறு பகுதிகளில் நிறுவன சுத்தப்படுத்தல் தொழில்களில் ஈடுபடுகின்றனர். அதேபோல் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான பலர் இந்தப் பகுதியில் வசிக்கின்றனர்.

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடும் பலரும் இங்கு வசிகின்றனர் எனத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

கொழும்பில் ஓட்டோ ஓட்டும் பலரும் இந்தப் பகுதியில் வாழ்கின்றனர். ஆகவேதான் இவ்வாறான ஒரு பகுதியில் பி.1.617.2 வைரஸ் பரவல் கண்டறியப்பட்டுள்ளதால் வைரஸ் வேறு பகுதிகளுக்கு வேகமாகப் பரவும் சாத்தியம் அதிகமாகவுள்ளது.

நாடு முடக்கத்தில் இருக்கின்ற காலகட்டத்திலும் கூட இந்தப் பகுதி மக்களின் சுகாதாரச் செயற்பாடுகள் மிகவும் கீழ் மட்டத்தில் இருப்பதாகவே பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் அதிகாரிகள் எமக்குத் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் இருந்து அருகில் உள்ள வேறு பகுதிகளுக்கு வைரஸ் தொற்றுப் பரவியிருக்கும் என்ற சந்தேகம் எமது மத்தியில் உள்ளது. ஆகவே, துரிதமாக இது குறித்து ஆராய்ந்து, வைரஸ் பரவல் இருப்பின் குறித்த பகுதிகளை முடக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்” - என்றார். (இ)

# ரஞ்சன் மருத்துவ சிசிக்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு

அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, மருத்துவ சிசிக்சைகளுக்காக நேற்றுக் காலை கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையின் பஸ்ஸொன்றில், பலத்த பாதுகாப்புடன் அவர் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 4 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, தற்போது அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ)



# மரண அறிவித்தல்கள்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 28 - 11 - 1945 |  | 18 - 06 - 2021 |

## திருமதி தவமணி இரத்தினம்

யாழ். சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, கலாசாலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தவமணி இரத்தினம் நேற்றுமுன்தினம் ( 18.06.2021 ) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், சின்னத்துரை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், கணபதிப்பிள்ளை இரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், கேதீஸ்வரன்( ஈசன்- ஜேர்மனி ), கவிதா ( ஆசிரியை - யாழ். பரமேஸ்வரா வித்தியாலயம்), காலஞ்சென்ற கஜேந்திரன், வனிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும்,கஜலஷ்சுமி (ஜேர்மனி), சிவகாந்தி ( இணைப்பாளர்- செயற்பட்டு மகிழ்வோம், யாழ். கல்வி வலயம் ) ஆகியோரின் அன்பு மாமியாரும், நடராசா, பராசக்தி, புவனேஸ்வரி, தனபாலசிங்கம், லோகேஸ்வரி, காலஞ்சென்ற ஆனந்தகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,சயந்தினி, விஷாளினி, கனிசிகா, ரேஸ்மிகா, பிறின்சிகா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (20.06.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம

இல. 51, கலாசாலை வீதி,
திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு : **ஈசன் - மகன்**
Mobile : +4917622630035 Phone : +4970719208891

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 25 - 11 - 1947 |  | 18 - 06 - 2021 |

## திருமதி கமலாதேவி தேவராஜா

யாழ். பருத்தித்துறை, அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கமலாதேவி தேவராஜா அவர்கள் நேற்று முன்தினம் (18.06.2021) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற தம்பையா - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,தேவராஜா ( ஓய்வுபெற்ற சிரேஷ்ட வரிமதிப்பாளர்- கொழும்பு ) அவர்களின் அன்பு மனைவியும், செங்கதிர் (ஜேர்மனி), வசந்தகுமாரி (கனடா), மதியழகன் (ஆசிரியர் - கொழும்பு றோயல் கல்லூரி ), பிரபாகரன் மாவட்ட செயலகம் - வவுனியா), சந்திரகுமாரி (பிரான்ஸ்), குபேந்திரன் (கனடா), ரவீந்திரன் (லண்டன்), ஜெயவதனி(கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், தவமணிதேவியின் அன்புச் சகோதரியும், சுமதி செந்தில்குமரன், தனுஜா, தர்ஷினி, விக்கினேஸ்வரன், வினோதினி, மைதிலி, ஜெயரூபன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சஷாங்கி, சாமுகி, சாத்விகன், சாதனா, சுருதி, விதுஜன், மதுஷாகி, ஆத்மிகன், ஆரத்யா, அஸ்விகன், அக்ஷயன், ஆர்த்திகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று (19.06.2021) சனிக்கிழமை மு.ப 10:00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் பொரளை கனத்தை பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 33 - 5/21, 42ஆம் ஒழுங்கை,
வெள்ளவத்தை, கொழும்பு-06

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு : **செங்கதிர் - மகன்**
Mobile : +491729290048

## சிலரின் குறுகிய...

மன்னார், இலுப்பைக் கடவைக்கான விஜயத்தை நேற்று மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர், பிரதேச கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, சுமார் 130 கடற்றொழிலாளர் குடும்பங்களைக் கொண்ட இலுப்பைக்கடவை கிராமத்தில், கடலட்டைப் பண்ணை அமைத்தல், நண்டு வளர்த்தல் போன்ற திடடங்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் இரு வேறான கருத்துக்கள் காணப்படுகின்றன.

குறிப்பாக, குறுகிய காலத்தில் கிராம மக்களின் பொருளாதாரத்தில் பாரிய வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய, கடலட்டை பண்ணை தொடர்பாக தவறான புரிதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மக்கள் பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைவதை விரும்பாத சில சுயலாப சக்திகள், இலுப்பபைக் கடவை மக்களில் ஒரு பகுதியினருக்கு கடலட்டை உற்பத்தி தொடர்பான தவறான புரிதலை ஏற்படுத்தியிருப்பதாவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்தோடு, குறுகிய நோக்கங்களுக்காக மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ள முரண்பாடு சுமுகமாகத் தீர்க்கப்பட்டு, குறித்த கிராம மக்கள், யாருடைய ஒத்துழைப்புக்களையும் எதிர்பார்க்காமல் வாழக்கூடிய வாழ்வாதாரம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்துள்ளார். (இ)

## 2,169 பேருக்கு...

னாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து இலட்சத்து 37 ஆயிரத்து 582 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 99 ஆயிரத்து 393 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்து 655 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## சீனாவின்...

இந்தியாவின் ஏ.என்.ஐ. செய்திச் சேவைக்கு அளித்துள்ள நேர்காணல் ஒன்றில் இதனைத் தெரிவித்த இந்திய கடற்படை துணைத் தளபதி அட்மிரல் ஜ.அசோக் குமார், “இந்தியக் கடற்படை நாட்டின் கடல் எல்லைகளைப் பாதுகாப்பதற்கு மிகவும் தயார் நிலையில் உள்ளது. அதனால், யாரும் எம்மை ஆச்சரியத்துக் குட்படுத்த முடியாது” எனவும் தெரிவித்தார்.

“இது ஒரு அச்சுறுத்தலா இல்லையா என ஆராய்ந்தால், அது மிகவும் கடினமான கேள்வியாகவே இருக்கும். ஆனால், எமது பிராந்தியத்துக்கு வெளியேயுள்ள யாராவது, அதிகளவுக்கு அக்கறை காட்ட ஆரம்பித்தால் - அதற்காக வளங்களை அதிகளவுக்கு அவர்கள் பயன்படுத்தினால், அதற்கு நியாயமான காரணம் இருந்தாலும் கூட, அது அச்சுறுத்தலாக அமையலாம். அவ்வாறான நிலையில் அதனை நாம் அதை நெருக்கமாக அவதானிப்பதை உறுதி செய்ய வேண்டும்” என நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அவர் தெரிவித்தார். இலங்கையில் சீனா அமைத்துள்ள புதிய துறைமுக நகரம் இந்தியாவுக்கு அச்சுறுத்தலா எனக் கேட்கப்பட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

“இவ்வாறான செயற்பாடுகளை இந்தியக் கடற்படை நெருக்கமாக அவதானிக்கின்றதா?” என அவரிடம் கேட்ட போது, “ஆம் பிராந்தியம் முழுவதையும் அவதானிக்கின்றோம்” என அவர் பதிலளித்தார்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளித்த இந்தியக் கடற்படைத் துணைத் தளபதி, “மும்பாயில் நடத்தப்பட்ட 26/11 தாக்குதலின் பின்னர் இந்தியா கடற்பாதுகாப்புக்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது. கடலோர பாதுகாப்பு வலையமைப்பு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அதனைவிட கண்காணிப்பு திறன்களை மேம்படுத்தியுள்ளது. கடல்சார் களமுனையில் நாம் அதிர்ச்சிகளை எதிர்கொள்வதற்கான வாய்ப்புகள் குறைகின்றன. நாம் ஒரு தசாப்தத்திற்கு முன்னர் இருந்ததை விட இன்று நாம் மிகவும் சிறப்பாக தயாரிக்கப்படுகிறோம். எதிர்காலத்தில் இந்தியக் கடற்படை மேலும் பலப்படுத்தப்படும்” எனக் குறிப்பிட்டார்.

## பொலிஸ்...

கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் பருத்தித்துறை நீதிமன்ற உத்தியோகத்தர்கள் இடையே கோவிட்-19 நோய்த்தொற்று உள்ளமை கடந்த சில நாள்களாக கண்டறியப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் பெறப்பட்ட மாதிரிகளில் 17 பேரின் மாதிரிகள் நேற்று முன்தினம் பரிசோதனைக்கு உட்படுத்த நிலையில் மீளவும் பெறுமாறு அறிவுறுத்தப்பட்டது.

அவர்களில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட ஐவருக்கு தொற்று உள்ளமை மீளப் பெறப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், பருத்தித்துறை நீதிமன்றில் பணியாற்றும் ஒருவருக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் ஐவரின் மாதிரிகளை மீளப் பெறுமாறு ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களால் அறிக்கையிடப்பட்டுள்ளது.

## கடும் எதிர்ப்பு...

உடனடியாகத் திறப்பது ஆபத்தானது என்று சுகாதார நிபுணர்கள், அரசிடம் சுட்டிக்காட்டி வருகின்ற போதிலும் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய பயணத் தடை நாளை அதிகாலை 4 மணியுடன் தளர்கின்றது.

அதேநேரம் எதிர்வரும் 23ஆம் திகதி இரவு 10 மணி முதல் 25ஆம் திகதி அதிகாலை 4 மணி வரையில் மீண்டும் பயணத் தடை அமுலாக்கப்படும் என்றும், அதன்பின்னர் பயணத் தடை தளர்த்தப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

பயணத் தடை தளர்த்தப்படும் போதும் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடானது தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனவும் அரசு அறிவித்துள்ளது.

உறவினர், நண்பர்கள் வீடுகளில் ஒன்று கூடுவதற்கான தடையும் தொடர்ந்து அமுலில் இருக்கும் எனவும் அரசு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், கடற்கரைகள், பூங்காக்கள் உள்ளிட்ட பொது இடங்களில் ஒன்று கூடவும் தடை விதிக்கப்படும் எனவும், திருமண நிகழ்வுகள், பொதுக் கூட்டங்கள் உள்ளிட்டவற்றுக்கான தடையும் தொடர்ந்து அமுலில் இருக்கும் எனவும் அரசு மேலும் தெரிவித்துள்ளது. (இ)

## தனியார்...

அபாயகரமான வெடிபொருட்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த காணியின் உரிமையாளர் அப்பகுதியை விவசாய நடவடிக்கைக்காக துப்பரவு செய்தபோதே இவ்வாறு வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

எறிகணை ஒன்றும் கிபிர் விமானக் குண்டு ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், மேலும் வெடிபொருட்கள் அந்த காணியில் புதைந்திருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் குறித்த வெடிபொருட்களை அங்கிருந்து மீட்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

### பயணத் தடையை மீறி நடமாடியவர்களை

# வீதியில் முழங்காலில் இருக்கவைத்து தண்டனை வழங்கிய இராணுவத்தினர்



மட்டக்களப்பு, ஜுன் 20

மட்டக்களப்பு, ஏறாவூர் பகுதியில் பயணக் கட்டுப்பாடுகளை மீறி வீதிகளில் நடமாடியவர்களை, தலைக்கு மேலே கைகளை உயர்த்தியவாறு வீதியில் முழங்காலில் இருக்க வைத்து இராணுவத்தினர் தண்டனை வழங்கியுள்ளனர் என்று சமூக வலைத்தளங்களில் செய்திகள் பகிரப்பட்டு வருகின்றன.

நாடளாவிய ரீதியில் பயணக்கட்டுப்பாடு அமுலில் உள்ள நிலையில் மருதமுனை பகுதியில் வீதிகளில் நடமாடியவர்களை இராணுவத்தினர் பிடித்து அவர்களைத் தலைக்கு மேலே கைகளை தூக்கியவாறு முழங்காலில் இருக்க வைத்து தண்டனை வழங்கியுள்ளனர்.

இராணுவத்தினரின் இத்தகைய செயற்பாட்டை ஒரு சிலர் பாராட்டிப் பதிவுகளை இட்டிருந்தாலும், பெரும்பாலானோர் அதற்கு தமது கண்டனங்களையும் பதிவு செய்துள்ளனர். (இ)

# கோவிட்-19 டெல்டா திரிபு தொடர்ந்து பரவுகின்றதா?

### புதிய முறை பரிசோதனைகள் முன்னெடுப்பு

கொழும்பு, ஜுன் 20

இலங்கையில் சமூகமட்டத்தில் அடையாளம் காணப்பட்ட இந்திய கோவிட்-19 டெல்டா வைரஸ் இனத்தைப் பற்றி மேலும் விசாரணைகள் நடந்து வருகின்றன.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் எடுக்கப்பட்ட மாதிரிகள் குறித்து இரண்டாவது சுற்று சோதனைகள் நடத்தப்படும் என்று ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு உயிரியல் நிறுவனத்தின் பணிப்பாளர், மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

இதுவரை பயன்படுத்தப்பட்ட மரபணு ஆராய்ச்சி முறைகளுக்கு மேலதிகமாக, நாட்டில் முதன் முறையாக ஒரு புதிய முறையைப் பயன்படுத்தி சோதனைகளை நடத்தும் திட்டங்களும் உள்ளன என்று அவர் கூறினார்.

முடிவுகளை விரைவாக வெளியிடும் திறன் இதன் சிறப்பு என்றும் மருத்துவர் சந்திம ஜீவந்தர குறிப்பிட்டார்.

## யாழ். மாவட்டத்தில்...

34 பேர்

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேர்,

யாழ்.சிறைச்சாலையில் 03 பேர்,

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் 17 பேர்,

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 06 பேர்,

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒருவர்,

பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையில் ஒருவர்,

யாழ்.போதனா வைத்தியசாலையில் 02 பேர்,

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் ஒருவர்,

மன்னார் மாவட்டத்தில் 04 பேர்

முருங்கன் ஆதார வைத்தியசாலையில் ஒருவர்,

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் 03 பேர்,

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவர்

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர்,

வவுனியா மாவட்டத்தில் 12 பேர்

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 12 பேர்,

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேர்.

## அமைச்சர்...

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமமுக் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இது குறித்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியிடப்பட்டது.

நேற்று முன்தினம் அமுலுக்கு வரும் வகையில், தொழிற்துறை அமைச்சு, விவசாய அமைச்சின் கீழிருந்த இயக்கங்கள், பொறுப்புகள், நிறுவகங்களைத் திருத்தும் புதிய வர்த்தமானி அறிவிப்பு ஒன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்துள்ளார்.

## எக்ஸ் - பிரஸ்...

ஐ.நா. சுற்றாடல் திட்டத்தின் 4 விசேட நிபுணர்களை உள்ளடக்கிய குழுவே கப்பல் விபத்தின் சுற்றாடல் தாக்கங்களை ஆராயும் களப் பயணத்தை ஆராம்பித்துள்ளது.

ஐ.நா. சுற்றாடல் திட்ட குழு சேத மதிப்பீடு மற்றும் மீட்புக்கான செயன்முறைகளில் இலங்கைக்கு உதவவுள்ளது என அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

குறித்த குழு நேற்று உஸ்வடகெய்யாவ கடற்கரையில் களப் பயணம் மேற்கொண்டது.

அமைச்சர் நாலக கொடஹேவா உட்பட இலங்கை அதிகாரிகளுடன் ஆரம்பகட்ட கலந்துரையாடல் ஒன்றையும் குறித்த குழு நடத்தியுள்ளது. (இ)

## 2,500 ஐத்...

விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர்களில் 23 பெண்களும், 31 ஆண்களும் உள்ளடங்கு கின்றனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 534 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## 2ஆவது தடுப்பூசி...

பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் மோசமான நிலை காணப்படுகின்ற சூழலில் மக்கள் தடுப்பூசியை பெறுவதற்காக நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர் ஒருவருடன் ஒருவர் சண்டையிடுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் இன்று வரும் நாளை வரும் என அமைச்சர்கள் பல திகதிகளை தெரிவித்தனர் அமைச்சர் பிரசன்னரணதுங்க மே மாதத்திற்குள் அனைவருக்கும் தடுப்பூசி வழங்குவோம் என தெரிவித்திருந்தார் என குறிப்பிட்டுள்ளார்.

தடுப்பூசியை அரசாங்கம் பலன் அளிக்க கூடிய விதத்தில் வழங்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். அரசியல் தேவைகள் சமூக தேவைகளை விட முன்னிலை பெற்றுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# தெமட்டகொடையில் மேலும் 15 பேருக்குத் தொற்று உறுதி

## ‘டெல்டா’ வைரஸா என்று ஆய்வு

கொழும்பு, ஜூன் 20

வேகமாகப் பரவி வரும் இந்திய “டெல்டா” கொரோனா வைரஸ் இலங்கையில் முதலில் அடையாளம் காணப்பட்ட தெமட்டகொடையில் மேலும் 15 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனினும், அவர்கள் எந்த வகையான கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்த, சம்பந்தப்பட்ட மாதிரிகள் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

தெமட்டகொடை ஆரம வீதி பகுதியில் ஏற்கனவே 5 பேர் இந்திய “டெல்டா” கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளதையடுத்து அங்கு மொத்தம் 129 பேர் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் 15 பேருக்குக் கொரோனா வைரஸ் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

“டெல்டா“ வகை வைரஸ் தொற்றின் அபாயத்தைக் கருத்தில்கொண்டு தெமட்டகொடை ஆரம வீதிப்பகுதியில் உள்ள மக்களுக்கு இன்று கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

“ஆரம வீதிப் பகுதியில் உள்ள அனைத்து மக்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி ஏற்ற நாங்கள் திட்டமிட்டுள்ளோம். ஏனெனில் இந்தப் பகுதியில் இந்திய “டெல்டா” வகை கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். நேற்றைய பி.சி.ஆர். பரிசோதனைகளில் மேலும் 15 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொழும்பு பகுதியில் நேற்று எழுமாறாக நடத்திய பி.சி.ஆர். பரிசோதனைகளில் இருந்து சுமார் 70 கொரோனாத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்” என்று கொழும்பு மாநகராட்சி மன்றத்தின் தொற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் தினுகா குருகே தெரிவித்துள்ளார். (இ)

# இலங்கையில் ‘டெல்டா’ வைரஸ் தாண்டவமாடினால் சுகாதாரத் தரப்பினரால் தாக்குப்பிடிக்கவே முடியாது

## பிரதிப் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை




கொழும்பு, ஜூன் 20

“இலங்கையில் இந்தியாவின் கொடிய திரிபு வைரஸான ‘டெல்டா’ பரவ ஆரம்பித்தால் அச்சுறுத்தல் அதிகமாகும். சுகாதாரத் தரப்பினால் தாங்கிக்கொள்ள முடியாத நெருக்கடி நிலைமை உருவாகும் என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.”

- இவ்வாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“பயணக் கட்டுப்பாட்டை மாத்திரம் பிறப்பித்து, சட்டத்தால் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது. பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்ட பின்னரும் மக்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றியாக வேண்டும். இல்லையேல் நிலைமைகள் மோசமடையும்.

“டெல்டா“ வைரஸ் தொற்றாளர் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களிடம் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. புதிய தொற்றாளர் எவரும் அடையாளம் காணப்படவில்லை. அதுமட்டுமல்ல வேறு பகுதிகளுக்கு “டெல்டா” வைரஸ் பரவியுள்ளதாகக் கண்டறியப்படவில்லை.

சகல விதத்திலும் சுகாதாரத் துறை மாத்திரம் நிலைமைகளைக் கையாள முடியாது. எனவே, மக்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஒருவேளை “டெல்டா“ வைரஸ் தொற்று இங்கு பரவ ஆரம்பித்தால் விளைவுகள் மோசமாகும். இந்தியாவின் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு எப்போதுமே நாம் செயற்பட்டாக வேண்டும்.

பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டாலும் கூட சுகாதாரக் கட்டுப்பாடுகள் பிறப்பிக்கப்படும். மக்கள் அவற்றை நிராகரிக்க முடியாது. சுகாதார வழிமுறைகளை முழுமையாகப் பின்பற்றினால் மக்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை” - என்றார். (இ)

# ராஜபக்ஷ அரசுக்கு எதிரான பதாதைகளுடன் மாட்டு வண்டியில் சென்ற நால்வர் சிக்கினர்

கொழும்பு, ஜூன் 20

எரிபொருள் விலை உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து ராஜபக்ஷ அரசுக்கு எதிரான பதாதைகளை மாட்டு வண்டியில் கட்சிப்படுத்திக்கொண்டு சென்ற நால்வர் நேற்று பிற்பகல் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மாகாலேல பாலத்துக்கு அருகில் இருந்து காலி நகருக்குள் நுழைய முற்படும்போது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த நான்கு பேரில் காலி மாவட்ட பிரதேச சபையின் முன்னாள் தலைவரின் மகனும் அடங்குகின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அரசுக்கு எதிரான பதாதைகளைக் காட்சிப்படுத்திக் கொண்டு ஒரு மாட்டு வண்டியில் காலி நகரை நெருங்கும்போது போக்குவரத்துத் தடைகளை மீறிய குற்றச்சாட்டில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தலாபிட்டி பகுதியில் உள்ள ஒருவரிடமிருந்து மாட்டு வண்டி வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் காலி பொலிஸாரால் மேற்கொள்ளப்படுகின்றன. (இ)

# கசிப்புக் குகை முற்றுகை!



யாழ்ப்பாணம், ஜூன் 20

சாவகச்சேரி, சரசாலை - குருவிக்காடுப் பகுதிக்குள் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த குழுவில் சந்தேகநபர் ஒருவரை மதுவரித் திணைக்களத்தினர் கைதுசெய்துள்ளனர்.

கசிப்பு அடங்கலான உற்பத்திக்கான பயன்படுத்திய உபகரணங்களையும் அவர்கள் கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மில்லி லீற்றர் கோடா மற்றும் 35 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு அடங்கலாக கசிப்பு உற்பத்திக்கான உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணத் தடை காலத்தில், மதுபான விற்பனை தடைசெய் யப்பட்டுள்ள நிலையில், சட்ட விரோத கசிப்பு உற்பத்தியில் பல நாட்களாக ஈடுபட்டு வந்துள்ளமை குறித்து சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதற்கமைய உதவி மதுவரி ஆணையாளர் க.தர்மசீலனின் அறிவுறுத்தலுக்கு அமைய, மது வரி அத்தியட்சகர் ரி. தங்கராசா, சாவகச்சேரி மதுவரி அதிகாரி த.அசோகரத்தினம் ஆகியோரின் வழிநடத்தலில் குறித்த சுற்றிவளைப்பை சாவகச்சேரி மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டனர்.

குறித்த சுற்றிவளைப்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரையும் சான்றுப் பொருட்களையும் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-3)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.06.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

பகல்

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : வீக் என்ட் மூவி-பாண்டவர் பூமி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்-தமிழ்நாடு எண் கணித நிபுணர் -வாஸ்த்து சாஸ்திர நிபுணர் கலாநிதி-ஜே.செல்வன்




6.00 மணி : கலக்கல் ஸ்ரார்- திறமையாளர்களுக்கான களம்



7.00 மணி : SPOTLIGHT- தமிழ் தேசிய பசுமை இயக்க தலைவர், முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் -பொன்னுத்துரை ஐங்கரநேசன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி :செல்லாடுகளம்
10.00 மணி:பதிவு-நேர்கொண்ட பார்வை - சட்டத்தரணி அசோக்பரன்




## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு